203

உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-க0.] விரோதிகிருதுஹ மாசிமீ [பகுதி-ச

உள்ளுறை.

வடமொழியும் தமிழும்:—பத்திராதிபர். கஎங

காவியநாடகச்சுவை:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. கஅ0

பூகோளம்:—ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர். கஅச

ஐயவினைத்தொடர்:—ஒரு மாணவச்சிறுவன். கஅகூ

நாலடியா ராராய்ச்சி:—ஸ்ரீமத்-குப்புசாமி சாஸ்திரிகள். ககூங

வானசாஸ்திரம்:—ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர். உ0க

ஜகத்குரு அவர்கள் விதேக கைவல்யமடைந்தது:—ஸ்ரீமத்-P. S. சுப்பிரமணிய ஐயர். உ0ரு

பாரதரகசியம்:—ஸ்ரீமத்-P. S. சுப்பிரமணிய ஐயர். உகங

ஜார்ஜ் சக்கிரவர்த்தியவர்களின் முடிசூட்டு வாழ்த்து:—ஸ்ரீமத்-V. தில்லைநாயக முதலியார். உககூ

அகப்பொருள் விளக்க மூலமுமுரையும்:—ஸ்ரீமான்-பொ. பாண்டித்துரைத் தேவர். கருங

புத்தக வரவு:—பத்திராதிபர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வரவுசெலவு கணக்கு:—

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1912. [தனிப்பிரதி அணா-8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

ஏஜண்டுகள் தேவை. ஏஜண்டுகள் தேவை.

கேசர் பவுடர்.

அணியுங்கள். மணங்களியுங்கள்.

ஐயன்மீர்

இதுகாறும் நம்மவர்கள் வெளியூர்களிலிருந்து வரும் (செண்டு) அத்தர்களை வாங்கி உபயோகித்து வந்தனர். இனி, அவ்வளவு சிரமமும் செலவும் வேண்டியதில்லை. நமது பவுடரை யாம் பிரதிதினமும் பூசிக்கொள்ளும் சந்தனத்துடன் கலந்து உபயோகிக்கின் இந்திரனணியுங் கந்தமோவென்று யாவரும் மயங்க உள்ளக்களிப்பும் உவகையும் செய்து தெள்ளிதில் வாசனை செய்திடும். இது 64 வகை அற்புத மூலிகைகளும் நயமான புனுகு சவ்வாது, கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூர முதலிய வாசனைத்திரவியங்கள்சேர்த்து நம்மவர்க்கென்றே பாகமாகச் செய்திருக்கிறது. இப்பவுடரை எள்ளளவு எடுத்து உயர்ந்தவேஷ்டிகள் சேலைகள் முதலியவற்றின் நடுவில் வைத்தால் வெளியூர்களிலிருந்துவரும் (பிட்டல்டஸ்டு)முதலிய வாசனைத்திரவியங்களைக் காட்டிலும் வாசனையாயிருக்கும். யான் கூறுவதாற் பயனில்லை. தாங்கள் ஒருமுறை வாங்கி யனுபவித்தால் தங்கள் மித்திரர்கட்கு இதன் பெருமை முதலியவற்றைத் தாங்களே கூறுவீர்கள்.

எங்கள் ஏஜண்டுகள் (S. I. Ry.) ரயில்வேக் கம்பெனியுள்ள இடங்கட்கெல்லாஞ் சென்று வருவதால் மற்றைய வியாபாரிகள் தங்கள் கம்பெனியில் உள்ள கிரயச்சாப்தா முதலிய நோட்டீஸ்களை 1000-க்கு ரூ. 1—0—0 வீதம் எங்கட்கனுப்பினால் ஏஜண்டுகள் எங்கள் நோட்டீசுகளோடு வெளிப்படுத்தி வருவார்கள்.

விலை,	தோலா	1	½	¼
	ரூ	1—0—0,	0—9—0,	0—5—0.

தங்கம், வெள்ளி, மெடல்களும் சர்ட்டிபிகேட்டுகளும்பெற்ற

பசலா கம்பெனி,

220/ சைனுபஜார் ரோட், (லா காலேஜுக்கு எதிரில்),

எஸ்பிளனேட், மதராஸ்.

205

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௧௦.] விரோதிகிருது௵ மாசிமீ [பகுதி-௪

வடமொழியும் தமிழும்.

(1) இவ் விரு மொழியும் ஒன்றற்கொன்று ஒற்றுமையும், வேற்றுமையும் ஒருங்கெய்தப்பெற்றுத் தொன்றுதொட்டு வழங்கப் பட்டு வருகின்றன.

(2) இவற்றுள் வடமொழி வேதம், சந்தம், கற்பம், வியா கரணம், நிருக்தம், சோதிடம், மீமாஞ்சை, தர்க்கம், யோகம், அற நூல், நீதிநூல், காமநூல், கணிதம், மருத்துவம், சிற்பம், பரதம், சங்கீதம் முதலிய பலவகை நூல்களா னிரம்பப்பெற்றிருத்தலாலும், பிறமொழியை யவாவாமையாலும் அது சிறந்ததென்பதும், ஏனையது அத்துணை நூல்களால் நிரம்பப்பெறாமையாலும், நிரம்பிய நூல்களும் வடமொழியினுதவியை வேண்டப் பெற்றிருத்தலாலும் அத்துணை சிறந்ததில்லை யென்பதும் ஒரு சாரார் துணிபு.

(3) அதனை மறுத்துத் தெய்வீகமுடைமையால் தமிழ் சிறந்த தென்பது பிறிதொரு சாரார் துணிபு.

(4) இரண்டு மிறைவனு லாக்கப்பட்டமையானும், உறுதிப் பொருள் பயத்தலானும் ஒப்புடைய வென்பது வேறுசிலர் துணிபு.

(5) இவற்றை, "அன்றியுந் தமிழ்நூற் களவிலையவற்று
ளொன்றேயாயினுந் தனித்தமிழுண்டோ" எனவும்,

"தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்ததுமுதலை
யுண்டபாலனையழைத்ததுமெலும்புபெண்ணுருவாக்

*

கண்டதும்மறைக்கதவினைத்திறந்ததுங்கன்னித்
தண்டமிழ்ச்சொலோமறுபுலச்சொற்கொலோசாற்றீர்." எனவும்,

"ஆரியம் நன்று தமிழ்தீ தெனமொழிந்த
காரியத்தாற் காலக் கோட்பட்டான்.",

"ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேதமுடைத்து தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து." எனவும் முன்னோர் பாடிய
பாடல்களாலும் உணர்க.

(6) அன்றியும் வடமொழி தமிழ் மொழிகளின் வேற்றுமை யொன்றையே நோக்குவோர் தமிழ் ஆதியில் வடமொழியின்றொடர்ப்பாடு சிறிதுமில்லாத தனிமொழியாய் எல்லாநூல்களானு நிரம்பப்பெற்றிருந்ததெனவும், ஒரூழியிற் றமிழ்நாடுகடல்கொள்ளப்பட்டகாலத்து அந்நூல்களிறந்துபட்டனவெனவும், பின்பு ஆரியர் தென்னாட்டிற்குடியேறியபின்னர் வடமொழிக்கலப்பாற்றமிழ்மொழி யுருவழிந்துவருகிறதெனவுங் கருதுவர்.

(7) அவ் விருமொழிகளுக்குமுள்ள வொற்றுமையொன்றையே நோக்குவோர் வடமொழி சிதைந்த பிராகிருதத்தின் சிதைவே தமிழ்மொழியாகியதல்லது பிறிதில்லையென்பர்.

(8) இவ்விரண்டனையும் நோக்குவார் "இருமொழிக்குங்கண்ணுதலார்முதற்குரவர்" எனவும், "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளியதற்கிணையாத், தொடர்புடையதென்மொழியை யுலகமெலாந்தொழுதேத்துங், குடமுனிக்குவலியுறுத்தார்கொல்லேற்றுப் பாகர்" எனவும் ஆன்றோர் கூறினமைகொண்டு இருமொழியும் இறைவனாலாக்கப்பட்டமையால் ஒத்தவியல்புடையனவென்பர்.

(9) வடமொழி யிலக்கணம் பாணினிமுனிவர்க்கும், தமிழிலக்கணம் அகத்திய முனிவர்க்கும் இறைவனாலுபதேசிக்கப்பட்டனவேயன்றி அவ்விருமொழிகளு மிறைவனாலாக்கப்பட்டனவாகக் காணப்படாமையாலும், "இருமொழிக்குங்கண்ணுதலார்முதற்குரவர்" என்று

கூறுதலால் மனவிருளிரியவுண்மைப்பொருளையுபதேசித்தலே குரவர் செயலாதலானும், சொற்பொருளுணர்த்தலாகிய வொருபயன்கருதி இறைவன் யாதேனுமொருவகை மொழியையாக்கவே யமைவதாயிருக்கப் பிறிதொருவகைமொழியினையுமாக்குதல் அவர்க்குப் பயனில் செயலாமாகலானும் இலக்கணவுபதேசஞ்செய்தாரென்பதே பொருந்தும்.

(10) அவ் விலக்கணவுபதேசத்திற்கு இலக்கியம் முன்பே நிகழ்ந்திருக்க வேண்டுமாதலால் அவ் விருவகை மொழிகளும் பண்டைக்காலந்தொட்டே (அநாதியாக) வழங்கப்பட்டு வருகின்றன வென்பது நன்கு புலப்படுகின்றது.

(11) மொழிகள் அநாதி யென்பதைப்பற்றி விசாரிக்கப்புகுந்தால் மிக விரியுமாதலாற் சுருக்கமாக இங்கு அநாதி யென்பதற்கு இன்னகாலத்தில் இன்னோரால் ஆக்கப்பட்டதென அறியமுடியாத நிலைமையுடையதென்பதே கருத்தாகக் கொள்க.

(12) இதனை, தொல்காப்பியத்துட் சொல்லதிகாரத்துள் கிளவியாக்கத்தின் முதற் சூத்திரவுரையுள் "வழுக்களைந்து சொற்களை ஆக்கிக்கொண்டமையின் இவ்வோத்துக் கிளவியாக்கமாயிற்று; ஆக்கம் அமைத்துக்கோடல்; நொய்யும், நொறுங்குங் களைந்து அரிசியமைத்தாரை அரிசியாக்கினா ரென்பவாகலின்." எனவும், "சொற்கள் பொருள் கண்மேல் ஆமாறு உணர்த்தினமையிற் கிளவியாக்கமாயிற்று எனினும் அமையும்" எனவும் சேனாவரையர் கூறியவாற்றானுமறிக. இங்கு ஆக்கமென்ற சொற்குக் காரியமெனப் பொருள்கொள்ளாது பிறிது பொருள்கொண்டதும் இதற்குச் சான்றாகின்றது. இவ்வாறே வையாகரணருஞ் சொற்களை நித்தியமென்பர். இது நிற்க.

(13) இனி யிம்மொழிகளின் ஒற்றுமை, வேற்றுமைகளைப் பற்றிச் சிறிதாராய்வோம். வடமொழியிற் பதப்பிரயோகங்கள் வைதிகம், லௌகிகம் எனப் பகுக்கப்பட்டு வைதிகப் பிரயோகங்கள் வேதத்திலும், லௌகிகப்பிரயோகங்கள் காவியாதிகளிலும் வழங்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறே தமிழிலும் உலகவழக்கு, செய்யுள் வழக்கு எனப் பகுக்கப்பட்டு அவை முறையே உலகநடையிலும்,

செய்யுள்நடையிலும் வழங்கப்படுகின்றன. இப்பாகுபாடு அம்மொழிகளின் முதுமைப்பாட்டை விளக்குகின்றது.

(14) தொல்காப்பியத்தின் முதற்சூத்திரம், "எழுத்தெனப்படுப அகரமுதல் னகரவிறுவாய் முப்பஃதென்ப" என அகரமுதலிய செவிப்புலனும் ஒலிக்கு எழுத்து எனப்பெயர் வழங்கி, என்ப என்றதனுல் இது தொல்லாசிரியர் குறியீடெனக்காட்டுகின்றது. இதனுல் அகத்திய முதலிய முதனூல்களிலும் அகரமுதலிய வொலிகள் வரிவடிவாகிய எழுத்தாலுணரப்படுதல் பற்றி எழுத்தென வழங்கப்பட்டனவென்பது வெளியாகின்றது. வரிவடிவு எழுதப்படுதலின் எழுத்தெனப்பட்டது. வடமொழியில் எழுத்திற்கு எழுதப்படுதல்பற்றி லிபி என்று பெயரிருப்பினும் அது கட்புலனும் வரிவடிவில் மட்டும் வழங்கப்படுவதேயன்றி அவ் வரிவடிவாலுணரப்படும் ஒலிவடிவில் வழங்கப்படுவதில்லை. ஒலி வடிவு, "வர்ணம்" என வேறு பெயரால் வழங்கப்படுகின்றது.

(15) கிரந்த லிபிகள் பெரும்பாலும் தமிழின்வரிவடிவெழுத்தோடு ஒற்றுமையுடையவாயிருத்தல் பின் வருமெழுத்துக்களிற் காண்க.

உயிர்.

கிரந்தலிபி —	ஊ	ஆ	ಂಽಂ	உ	ஊ	ஏ	ஒ	ஔ.
தமிழெழுத்து—	அ	ஆ	ஈ	உ	ஊ	எ	ஒ	ஔ.

மேய்.

கிரந்தம்	க	ச	ஞ	ட	ண	த	ந	ப	ய	ர	வ
தமிழ்	க	ச	ஞ	ட	ண	த	ந	ப	ய	ர	வ

இவற்றுள், இன்ன லிபி முற்பட்டதென்பது வடிவின் வேறுபாடுகொண்டாராயவேண்டும். தமிழெழுத்தில் எகார ஒகாரங்களுக்கு அக் குற்றெழுத்தின் வேற்றுமைதோன்ற முனையிற் புள்ளிகொடுத்து வேறுபடுத்தல் பிற்கால வழக்கு.

(16) வடமொழியெழுத்துக்கள் இலக்கணநூலிற் கிடக்கை முறைபற்றியே "அச்," "ஹல்" என்பது முதலிய இடுகுறிப்பெய

ரால் வழங்கப்படுகின்றன. தமிழெழுத்துக்கள் உயிர், மெய், உயிர் மெய், வலி, மெலி, இடை, தனிநிலை என அவ்வவ் வியல்புபற்றிய காரணப்பெயரால் வழங்கப்படுகின்றன. உயிர், மெய் முதலிய பெயர்ப்பொருள்களைக் கருதுமளவில் அப்பெயர் தோன்றும் காலத்தே தத்துவநூலுணர்வுமுதிர்ச்சியி னுடனிகழ்ச்சி தோன்றுகின்றது.

(17) தமிழில் மொழிக்குமுதலா மெழுத்துக்க ளிவையென்றும், மொழிக்கு ஈறுமெழுத்துக்க ளிவையென்றும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. வடமொழியில் அங்ஙனமில்லை.

(18) தமிழில் அஃறிணையொருமைச் சேய்மைச் சுட்டுப்பெயர் "அது" என்பதாம். வடமொழியிலப்பெயர் "தத்" என்பதாம். இவற்றுள், தமிழ்ச்சொல்லின் ஈற்றில் உகரமும் வடசொல்லின் முதலில் தகரவொற்றும் மிக்கிருத்தல் வேறுபாடாம்; அன்றியும், தமிழ்ச்சுட்டாகிய "அது" என்பதிலுள்ள முதனிலை அகரம்பிரிந்து அவன், அவள், அவர், அவை, அங்கு என ஏனைச்சுட்டுப்பெயர்களாதற்கும் உறுப்பாயிருத்தலால் அகரம் சுட்டுப்பொருளையுணர்த்தி நின்றதெனப் புலப்படுகின்றது. அவ்வாறே அப்பெயரினிறுதிநிலையாகிய துகரம் பிரிந்து குறிது, சிறிது, கரிது, பெரிது, கோட்டது, குழையது, கிடந்தது, பறந்தது எனப் பெயரிலும், இருவகைவினையிலும் இறுதி நிலையாய்நின்று அஃறிணையொருமைப்பொருளுணர்த்துகின்றது. பின்வரும் இது, எது, யாது என்பவற்றுள்ளும் இவ்வாறு பகுதி விகுதி பிரிந்துநின்று வேவ்வேறு பொருளுணர்த்தலால் அவையும் பகுபதமாமாறு கண்டுகொள்க.

(19) தமிழில் அஃறிணையொருமை அண்மைச்சுட்டுப்பெயர் "இது"என்பதே. வடமொழியில் இப்பெயர் "இதம்"என்று வழங்கப்படும். இதனுள் இறுதிநிலை அம் என்பது மிக்கிருத்தலே வேறுபாடு.

20. "எது" "யாது" என்பன தமிழில் அஃறிணையொருமை வினாப் பெயராம்; வடமொழியிலிப்பெயர் "யத்" என வழங்கப்படுகிறது. யகர எகரங்களுக்கு வேறுபாடின்மை யதுகுலம் - எதுகுலம், யந்திரம் - எந்திரம், என்பவற்றுற் காண்க.

இம் மூவகைப்பெயர்களும் தமிழிற் காரணமரபாகவும், வடமொழியில் இடுகுறிமரபாகவும் வழங்கப்படுகின்றன. இவற்றின் உரிமையாராயத்தக்கது.

(21) தமிழிற் புனல் என்னுந் திரிசொற் பொருளுக்கு உலக வழக்கில் தண்ணீர், வெந்நீர் என அடையடுத்தும், அடையடாதும் வரும் நீர் என்பதே இயற்சொல்லாகக் காணப்படுகிறது. வடமொழியில் அப்பொருள் நீரம் என்னுந் திரிசொல்லால் வழங்கப்படுகிறது. தமிழில் வழங்கப்படும் நீரென்னுஞ் சொல்லை வடசொற் றிரிபென்பர் சேனாவரையர். தமிழர் தண்ணீருக்குப் பெயரிடு முன்னமே ஆரியர் தந்நாடுவிட்டுத் தென்னாடு போந்தனர்போலும். நீர்மை—நீரின் றன்மை எனவும், "நீரவரென்றார் இனிமைபற்றி" எனவும் பரிமேலழகருரைப்பர். இதனை நோக்கத் தமிழ்மொழியாகவும் தோன்றுகிறது. இதனுண்மை யாராயத்தக்கதே. மலைநாட்டார் வழங்கும் வெள்ளமென்னும் பெயரும் வெள்ளோலை என்பதுபோல வெறுமைப் பண்புபற்றி யடையடுத்த அப் என்னும் வடமொழித் திரிபாகக் கொள்ளக்கிடக்கின்றது. வெண்மை விசிட்டத்தின் வேறுந்தன்மை; தூய்மையுமாம். இத் தன்மையுடைய பொருள் வடமொழியிற் சுத்தம் என்னும் சொல்லால் வழங்கப்படும். ஆதலால் வெள்ளம் என்பதும் சுத்தசலம் என்பதும் ஒருபொருட்சொல்லெனக் கொள்க.

(22) தமிழில் ஒருறுப்பிற்கும், ஓரளவிற்கும் கால் என்னும் பெயர் வழங்கப்படுவதுபோல வடமொழியிலும் அவ்வுறுப்பிற்கும், அவ்வளவிற்கும் (பாதம்) பாதம் என்னும் பெயர் வழங்கப்படுகிறது.

(23) தமிழில் பன்முறையென்னும் பொருளில் ஓர் உறுப்பின் பெயரடுக்கால் "அடிக்கடி" என வழங்குவதுபோல வடமொழியிலும் அப்பொருளில் (பதேபதே) "பதேபதே" என வழங்குகின்றனர்.

(24) இன்னும் அப் பெயரால் இளங்கோவடிகள், அறவணவடிகள் என உயர்ந்தோரை வழங்குவதுபோல வடமொழியிலும் கிருஷ்ண பாதா:, ஹம்ஸ பாதா: என உயர்ந்தோரை வழங்குகின்றனர்.

25. தமிழில் அறிதற்கருவியும், அளவும் அளவை யென்னு மொருசொல்லால் வழங்கப்படுகின்றன. வடமொழியிலும் அவை அவ்வாறே (ப்ரமாணம்) "பிரமாணம்" என்னும் சொல்லால் வழங்கப் படுகின்றன.

(26) வடமொழியில் திலத்தின்உள்ளது என்னும் தொடர்மொழி தைலம் என ஒரு மொழியாவதுபோலத் தமிழில் எண்ணின் உள்ளது என்னும் தொடர்மொழி எண்ணை என ஒரு மொழியாகிறது. எண், எள் என்பன ஒரு பொருட்சொற்கள். இதனைச், "சாதிகுழூஉப்பரண் கவண்பெயரிறுதி," என்னும் நன்னூற் சூத்திரத்து "உணவு எண்" என்பதனானு மறிக. 'எண்ணெய்' யென்பது வேறு தொடர்மொழி. எண்ணை யென்பது ஐகாரவிகுதிபெற்ற தத்திதாந்தவொருமொழி.

(27) தமிழில் எண்ணை எனுஞ் சொல்லுக்குள்ள எண்ணின் உள்ளது என்னுந் தொடர்மொழிப் பொருளையொழித்து நெய் என்னு மளவிற் பொருள்படுமாறு எள்ளெண்ணை, வேப்பெண்ணை, ஆமணக் கெண்ணை என வழங்குவதுபோல வடமொழியிலும் தைலம் என் னுஞ் சொல்லுக்குள்ள திலத்தின்உள்ளது என்னுந் தொடர்மொழிப் பொருளை யொழித்து நெய்யென்னுமளவிற் பொருள்படுமாறு தில தைலம், நிம்பதைலம், ஏரண்டதைலம் என வழங்குகின்றனர். இதற்கு வடமொழியிலிலக்கணம் விதிக்கப்பட்டிருக்கிறது. தமிழில் தத்திதாதிகாரம் நிரம்பாமையால் இலக்கணங் காட்டுதலரிது.

(28) வடமொழியில் எண்ணால் வருபெயர்களை எண்ணுப் பொருள் குறிப்பனவும், எண்ணிரம்பற் பொருள்குறிப்பனவுமென விருவகைப் படுத்து எண்ணுப்பொருள் குறிப்பனவற்றை ஏக:, த்வௌ, த்ரய: எனவும், எண்ணிரம்பற் பொருள் குறிப்பனவற்றை ப்ரதமம், த்விதீயம், த்ருதீயம் எனவும் வழங்குவர். அவற்றை அவ்வாறேதமிழரும் (எண்ணுப்பொருள் குறிப்பனவற்றை) ஒன்று, இரண்டு, மூன்று எனவும், (எண்ணிரம்பற்பொருள் குறிப்பனவற்றை) முதலாவது, இரண்டாவது, மூன்றாவது எனவும் வழங்குவர். இவற்றுள் எண்ணிரம்பற் பொருளில் வடமொழியில் ஏகம் என்பதுமட்டும் முழுவதும் கெட்டு ப்ரதமம் என வழங்கப்படுவதுபோலத் தமிழிலும் அப்பொருளில்

ஒன்றென்பதுமட்டும் முழுவதும் கெட்டு முதலாவதென வழங்கப் படுகிறது. இவைபோலு மின்னுமெண்ணிறந்த பிரயோகங்களுக் கெல்லாம் வடமொழியி லிலக்கணங்களமைக்கப்பெற்றுள்ளன. இக் காலத்து வழங்கும் தமிழிலக்கணத்தில் தத்திதாதிகாரம் நிரம்பப் பெறாமையால் இத்தகைய பல இலக்கியங்களுக்கு இலக்கணங்காட்ட லரிதாகின்றது.

(29) தமிழில் தன்மை, முன்னிலை, படர்க்கைப்பெயர்கள் பிற வேற்றுமையினின்றும் முதல் வேற்றுமையில் வேறுபட்டு வழங்கப் படுவன போல வடமொழியிலும் அப் பெயர்கள் பிறவேற்றுமையி னின்றும் முதல்வேற்றுமையில் வேறுபட்டு வழங்கப்படுகின்றன. அவைவருமாறு:—

தமிழில் தன்மையொருமைப்பெயர் யான், என்னை என வேறு படும். வடமொழியில் அவ் வொருமைப்பெயர் அஹம், மாம் என வேறுபடும். தமிழில் தன்மைப்பன்மைப்பெயர் யாம், எம்மை என வேறுபடும். வடமொழியில் அப் பன்மைப்பெயர் வயம், நஃ என வேறுபடும். பிறவுமிவ்வாறு வேறுபட்டுவருவன கண்டுகொள்க.

(தொடரும்.)

பத்திராதிபர்.

உ

காவிய நாடகச்சுவை.

விபாவங்களாலும், அநுபாவங்களாலும், சஞ்சாரிபாவங்களா லுந் தோன்றிய விருப்பு முதலிய உள்ளச்செய்தியே சுவை எனப் படும். விபாவங்களாவன உருவம், இளமை முதலியன. விபாவம்= விசேடமாகத் தோன்றியது. அநுபாவங்களாவன வேர்வு, நடுக்கம் முதலியன. அநுபாவம்=பின்னர்த்தோன்றியது. சஞ்சாரிபாவங்க ளாவன ஐயம், வெறுப்பு முதலியன. சஞ்சாரிபாவம்=துணைசெய் வதாகத் தோன்றியது. விபாவங்களைக் காரணம் என்றும், அநு பாவங்களைக் காரியம் என்றும், சஞ்சாரிபாவங்களைத் துணை என்றும் மம்மடபட்டர் கூறுவர்.

இந்தச் சுவை காவியங்களிலும், நாடகங்களிலும் அங்கங்கே அமைந்து கற்பவர்க்கெல்லாம் களிப்பினைக் கொடுக்கும். இலகுவாக அறியத்தக்கதன்று. பல நூற்றுறைகளிலுஞ் சென்ற நுண்ணுணர்வு கொண்டே அறியத்தக்கது. சுவையமையப் பெருத காவியங்களும், நாடகங்களுங் கவிஞர்க்கு விருப்பினைக் கொடுக்கமாட்டாது. காவியங் களிற் கொள்ளப்படுஞ் சுவை எட்டு. அவை தென்மொழியிலே உவகை, நகை, அவலம், வெகுளி, வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு என்று வழங்கப்படும். இவற்றோடு சாந்தம் என்பதனையுங் கூட்டி நாடகத்தில் ஒன்பது என்று வழங்கப்படும். இவற்றோடு வற்சலம் என்பதனையுங் கூட்டிப் பத்தென்று கொள்வாருமுளர்.

க. உவகைச்சுவை.

விருப்புக் காரணமாகத் தோன்றுஞ் சுவை உவகைச்சுவை எனப் படும். விருப்பாவது செல்வம் முதலியன காரணமாகத் தோன்றும் மனமலர்ச்சி. இவ்வுவகைச்சுவைக்கு அவலம்,இழிப்பு, வீரம், அச்சம் என்னும் நான்கு சுவைகளும் மாறு. நான்கனுள்ளே ஒன்று வந்து விரவுறினும் உவகையைப் பழுது செய்யும்.

உ. நகைச்சுவை.

நகை காரணமாகத் தோன்றுஞ் சுவை நகைச்சுவையாகும். நகை யாவது வேறுபாடான உருவம், வேடம், செயல் முதலியவைகளைக் காண்டலால் உண்டாகுஞ் சிரிப்பு. இந் நகைச்சுவைக்கு அச்சம், அவலம் என்னும் இரு சுவைகளும் மாறு.

ங. அவலச்சுவை.

அவலங் காரணமாகத் தோன்றுஞ் சுவை அவலச்சுவையாகும். அவலமாவது பிரியமாயுள்ள ஒன்றனை இழத்தலாலும், வெறுப்பா யுள்ள ஒன்றனை அடைதலாலும் உண்டாகும் வியாகுலம். இந்த அவலச்சுவைக்கு நகை, உவகை என்னும் இரு சுவைகளும் மாறு.

ச. வெகுளிச்சுவை.

குரோதங் காரணமாகத் தோன்றுஞ் சுவை வெகுளிச் சுவை யாகும். குரோதமாவது அநுகூலமல்லாத செயலால் உண்டாகும்

மனக்கொதிப்பு. இவ் வெகுளிச்சுவைக்கு உவகை, அச்சம் என்னும் இரு சுவைகளும் மாறு.

ரு. வீரம்.

வீரங் காரணமாகத் தோன்றுஞ் சுவை வீரச்சுவையாகும். வீரமாவது உத்தமபுருடனுக்குச் செய்யுங் காரியங்களிலே நிகழும் வித்தகமான முயற்சி. இதனை வடநூலார் தானவீரம், தருமவீரம், தயாவீரம், யுத்தவீரம் என நான்காக வகுப்பர். இவ் வீரச்சுவைக்கு அச்சம், சாந்தம் என்னும் இரு சுவைகளும் மாறு.

சா. அச்சச்சுவை.

அச்சங் காரணமாகத் தோன்றுஞ்சுவை அச்சச்சுவையாகும். அச்சமாவது கொடியனவற்றைக் காண்டலால் உண்டாகும் மனக்கலக்கம். இச் சுவைக்கு வீரம், வெகுளி என்னும் இரு சுவைகளும் மாறு.

எ. இழிப்பு.

இழிப்புக் காரணமாகத் தோன்றுஞ் சுவை இழிப்புச்சுவையாகும். இழிப்பாவது துர்க்கந்தம், புலால் முதலியவற்றைக் காண்டலால் உண்டாகும் அருவருப்பு. இச் சுவைக்கு உவகைச்சுவை மாறு.

அ. வியப்புச்சுவை.

வியப்புக் காரணமாகத் தோன்றுஞ் சுவை வியப்புச்சுவையாகும். வியப்பாவது முன்னர்க்காணாத ஒன்றினைக் காண்டலால் உண்டாகும் மனவிரிவு.

கூ. சாந்தச்சுவை.

சமநிலை காரணமாகத் தோன்றுஞ் சுவை சாந்தச்சுவையாகும். சமநிலையாவது சுகதுக்கங்களையும், பகையுறவுகளையுஞ் சமமாகக் காண்டல். இச் சுவைக்கு வீரம், உவகை, வெகுளி, அச்சம், நகை என்னும் ஐந்து சுவையும் மாறு.

கo. வற்சலச்சுவை.

வற்சலங் காரணமாகத் தோன்றுஞ் சுவை வற்சலச்சுவையாகும். வற்சலமாவது புத்திரர் முதலியோரிடத்துக் காணப்படும் வீரம், கல்வி முதலியவற்றால் உண்டாகும் அன்பு.

இச் சுவைகளுள்ளே எச் சுவை எவ்விடத்துத் தோன்றவேண்டுமோ அச் சுவை அவ்விடத்துத் தோன்றுமாறு நல்லிசைப் புலவர் வேண்டுஞ் சொல்லும் பொருளும் அமைத்துக் கூறுவர். கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, பெரியபுராணம் முதலிய நூல்களை நோக்குக. அங்கே உதாரணங்களெல்லாம் அகப்படும்.

இச் சுவைகளுக்கு வடநூலார் சிலர் நிறமுங் கூறுவர். சிலர் தெய்வமுங் கூறுவர்.

க. உவகை—பச்சை.

உ. நகை—வெள்ளை.

௩. அவலம்—புகர்.

௪. வெகுளி—சிவப்பு.

ரு. வீரம்—பொன்மை.

சு. அச்சம்—கருமை.

எ. இழிப்பு—நீலம்.

அ. வியப்பு—பொன்மை.

கூ. சாந்தம்—வெண்மை.

இவைகட்கு நிறங்கூறல் கவிநியமம். இவ்வாறே கீர்த்தியையுஞ் சிரிப்பையும் வெள்ளை என்றும், கோபத்தினைச் சிவப்பு என்றும், பாபத்தினைக் கறுப்பு என்றும், மனங் கறுப்பு என்றும் கவிஞர் கூறுமாறறிக.

கவிகளையன்றி வாக்கியங்களையுஞ் சுவை பெறுமாறு நன்கமைத்தல் ஆவசியகம். சொற்களையுஞ் சுவையுடையனவாகத் தெரிந்து கொள்ளல் வேண்டும். வழூச்சொல், இழிசொல், திசைச்சொல் முதலியன சுவையைக் கெடுக்கும்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

பூகோளம்.

(கசூஅ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

52. இங்ஙனமே யொருவருக்கொருவர் எதிரிலிருப்போரைக் கீழிருப்பவராக நினைக்கின்றனர். அஃதாவது யாமகோடியிலுள்ளோர் ரோமகபுரியிலுள்ளோரைக்கீழிருப்பவரென நினைக்கின்றார்கள்; அவ்வாறே ரோமகபுரியிலுள்ளோர் யாமகோடியிலுள்ளோரைக் கீழிருப்பவராக நினைக்கின்றனர். அங்ஙனமே இலங்கையிலுள்ளோருஞ் சித்தபுரத்திலுள்ளோருமொருவரையொருவர் கீழிருப்பவரென நினைக்கின்றனர்.

53. இப்பூமியிலுள்ளாரனைவரு மற்றையர்களைவிடத் தாமே மேலிருப்பவரென நினைக்கின்றனர்; பூமி அந்தரத்திலிருப்பதா லிதற்கு மேலுமில்லை ; கீழுமில்லை.

54. தாமிருக்குமிடத்தைச் சுற்றிப்பார்க்கும்பொழுது, பூமி கோளவடிவினதாயினும் பார்ப்போர் சிறு வடிவினராயிருப்பதால் விருத்தாகாரமாகக் காணப்படுகிறது.

55. இந்தப்பகோளமானது (நக்ஷத்திரமண்டலம்) சமரேகையிற் றேவர்கட்கு(வலமிருந்து) இடமாயும், அசுரர்கட்கு(இடமிருந்து) வலமாயுஞ் சுற்றுகின்றது. நிரக்ஷரேகையில் (Equator) கீழ்புறமிருந்து மேல்புறமாய் நேரே செங்குத்தாய்ச் (Vertically) சுழலுகிறது.

56. நிரேக்ஷரேகையில் எப்பொழுதும் பகலில் முப்பது கடிகையும், இரவில் முப்பது கடிகையுமாக விருக்கிறது. தேவலோகத்திலும், அசுரலோகத்திலும் (உத்தர தக்ஷிண கோளார்த்தங்களில்) ஏறுவது மிறங்குவதுமாயிருக்கின்றது.

57. சூரியன் மேஷமுதலிய மூன்றிராசிகளிலிருக்கும் பொழுது பகல்மானம் வரவர அதிகரித்தும், இவுநாழிகை வரவரக் குறைந்து கொண்டும் (கடகராசிவீதிவரையில்) வந்து, மறுபடி யதிகரிக்கிறது ; இதற்கு நேர்விரோதமாய் அசுரபக்கமேற்படுகின்றது.

217

58. சூரியன் தக்ஷிண இராசிகளான துலா முதலியவைகளி லிருக்கும்பொழுது பக லிராசிமானநாழிகைகள் முறையே குறைந்து மதிகரித்தும் வருவது முன்னதற்கு முரணு யேற்பட்டிருக்கிறது; இதனை முன்னரே தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.(4)

59. பூமியின் சுற்றளவைச் சூரியனது சாய்வு பாகைகளாற் பெருக்கியதன் றொகையை 360-பாகைக்கு ஈந்தளவிற் சூரியன் நிரக்ஷ ரேகைக்குத் தெற்கிலோ வடக்கிலோ (அந்தச் சாய்வுக்குத்தக்கபடி) செல்கிறது.

60, 61. இதுபோலவே சூரியனுடைய அதிசாய்வை யோசனை* யிற் கண்டுகொண்டு பூமியின் சுற்றளவில் நான்கிலொரு பாகத்திற் கழிக்கவந்த மிகுதி உத்தர தக்ஷிணயனநாளாகும். அன்று இரவு பகல் 60-கடிகையாகவேயிருக்கும்.

62. அவைகட்கு மத்தியில் (நிரக்ஷரேகையின் சமீபத்திலொரு துருவத்தை நாடும்பொழுது) பகலும், இரவும் 60-கடிகைக்குள் ஏறி யிறங்கும்; அதற்கப்புறம் (துருவத்தில்) பகோளங்கள் முரணுகச் சுற்றுகின்றன.

63. (முற்கூறியதுபோல்) இரண்டிராசிகளினுடைய பாகைக ளாலுண்டாகுஞ் சாய்வால் (declination) யோசனை தூரத்தைக் கண்டுபிடித்துப், பூமியின் சுற்றளவில் நான்கிலொருபாகத்திற் கழிக்க; மிகுதியிருக்கும் யோசனை தூரமுள்ள விடங்களில் தனுர், மகராசி மண்டலங்கள் தேவ (உத்தர) கோளத்திற் றோன்றுவாம்.

---

(4) அது வருமாறு.-சூரியன் சாய்ந்திருக்கும் பாகையை நாடிவலய சாயை யிலுள்ள அங்குலத்தாற் பெருக்கிப் பன்னிரண்டிற்குக் கொடுத்தபாகம் குஜ்யா வெனப்படும். சூரியோதய வட்டத்திற்கும் அநுமான வானத்திற்கும் இடையி லுள்ள வெளிக்குக் (Arc) குஜ்யாவென்று பெயர். இக் குஜ்யாவை வட்டக் குறுக்களவின் பாதியாற் பெருக்கித் திஜ்யத்திற்கீந்த பாகம் ஆரோகணவித்தி யாசம். இவ்வாரோகண வித்யாசத்தை யொருகிரகத்தின் தினமானநாழிகையின் நாலிலொரு பாகத்திற் கூட்டியோவல்லது கழித்தோ பார்க்கின் அந் நாழிகைகள் கிரகச்சாய்வு வடபுலமாயிருக்கும்போது முற்பகல், முன்னிரவு நாழிகைகளா கும்; இதற்குமாறுகத் தென்புலத்திற்கு வரும்.

* யோசனை-யென்பது 42696-இங்கிலீஷ் மைல்.

64. அசுர (தக்ஷிண) கோளார்த்தத்தில் அதேயோசனையில் மிதுன, கடக விராசிகள் தோன்றுவாம். பூமியின் சாயைதெரியாத பாகங்களிற் சூரியனெப்பொழுதுந்தோன்றும்.

65, 66. பூமியின் சுற்றளவில் நான்கிலொரு பாகத்திலிருந்து ஒரு இராசிச் சாய்வுக்குள்ள யோசனை தூரத்தைக் கழிக்கவே, எஞ்சியிருக்கும் நிரக்ஷரேகைக்குள்ள யோனை தூரத்திற்கப்பால் சூரியனுத்தர கோளார்த்தத்தில் விருக்சிகம், தனுசு, மகரம், கும்பங்களிலிருக்கும்பொழுது அவ்விடங்களிற் றோன்றுவதில்லை. அதேபாகையில் தெக்ஷிணபாகத்தில் ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மத்திலிருக்கும்போது புலப்படுவதில்லை.

67. தேவதைகள் வடபுலத்துள்ள ஆறிராசிகளிலுஞ் சூரியன் சஞ்சரிக்கும்போது அதனை இடைவிடாது காண்கின்றனர்; அதுபோலவே தென்புலத்துள்ள துலா முதலிய விராசிகளிற் சூரியன் சஞ்சரிக்கும்பொழுது அசுரர்கள் இடைவிடாது காண்கின்றனர்.

68. பூமியின் சுற்றளவிற் பதினைந்திலொருபாகத்தி னுச்சியில் உத்தர கோளார்த்தத்திலும், தக்ஷிணகோளார்த்தத்திலும் சூரியன் செல்லும்பொழுது உத்தராயண தக்ஷிணயனங்களுண்டாகின்றன.

69. (நிரக்ஷரேகைக்கும் கடகாயன மகராயன ரேகைக்கும்) மத்தியில் பாதச்சாயை வடக்கு அல்லது தெற்கி லிருக்கலாம்; இவ்விரேகைக்குப்புறம்பே மேருவை நோக்கிச் சாயைவிழுகிறது.

70. சூரியன் யாமகோடியினுச்சியில் வரும்பொழுது இலங்கையி லுதயமாகிறான்; அப்பொழுது ரோமகபட்டினத்தில் நள்ளிரவும், சித்தபுரத்தில் அஸ்தமனமு முண்டாகின்றன.

71. இங்ஙனமே சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே பிரதக்ஷிணஞ் செய்யும்பொழுது நண்பகல், உதயம், நள்ளிருள் அஸ்தமனமென்னு மிவைகள் பாரதவருட முதலிய வருடங்களி லுண்டாகின்றன.

72. மேருவி னுச்சியைநோக்கிச் செல்லுமொருவனுக்குத் துருவநக்ஷத்திரங்களினுச்சமும், நக்ஷத்திரமண்டலங்களின் சாய்வும்

அதிகப்படுகின்றன. நிரக்ஷரேகைக்குத் திரும்பும்பொழுது இதற்கு முரணுக அவை மாறுகின்றன.

73. பகோளம் உத்தர தக்ஷிண பாகங்களிற் பந்தப்பட்டிருப்ப தால் பிரவாஹம் என்னும் வாயுவாற் சலிக்கப்பட்டுச் சுழன்றுகொண் டே யிருக்கின்றது; அங்ஙனமே யதனையுள்ளிட்ட கிரகங்களும், அத னதன் ரேகைகளிற் (orbits) சஞ்சரிக்கின்றன.

74. பூமியைப்போலச் சூரியனைத் தேவர்களும், அசுரர்களும் ஆறுமாதம் விடாமற் பார்க்கின்றனர்; மனிதவர்க்கம் பிரதிதினமும் பகற்காலமும், சந்திரனது மேற்பாகத்திலிருக்கும் பிதிரர்கள் ஒருபக்ஷ மும் சூரியனைப் பார்க்கின்றனர்.

75. மேலிருக்குங் கிரகங்களின் வீதிகள் கீழிருக்குங் கிரகங் களின் வீதியைக்காட்டிலும் பெரிது; வீதிகளின் பாகைகளுமதிக விரிவுள்ளன.

76. சிறியவீதியிற் (smaller orbit) செல்லுங் கிரகங்கள் இராசி மண்டலத்தை மிகத்துரிதமாகப் பரிவர்த்தனஞ் செய்கின்றன. பெரியவீதிகளையுடைய கிரகங்கள் விளம்பமாகப் பரிவர்த்தனஞ் செய் கின்றன.

77. இக் காரணத்தாற் சோமன் சிறியவீதியையுடையவனுகை யா லதிதுரிதமாகப் பரிவர்த்தனஞ் செய்கின்முன். சநி அதேகாலத் திற் பெரியவீதியிற் சிறிதுதூரம் பரிவர்த்தனஞ்செய்கிறுன்.

78. (31-வது சுலோகத்திற்கூறிய முறையில்) சநி முதல் நான் காவது நான்காவது கிரகங்கள் தினுதிபதியாகின்றனர். (5) இங்ஙனமே ஒவ்வொரு மூன்ருவது கிரகங்களும் ஒவ்வொரு வருடத்திற்குமதிபதி யாவார்.

79. சந்திரன் முதல் அதற்குமேலுள்ள கிரகங்கள் (30-நாள் கொண்ட) ஒவ்வொருமாதத்திற்கும் அதிபதியாம். சநிமுதல் கீழி ருக்கும் கிரகங்கள் முகூர்த்தாதிபதிகளாம்.

---

(5) சநி, குரு, அங்காரகன், சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன் இம் முறைப்படி சநிக்கு நான்காவது சூரியன் முதல்நாளாகும் சூரியனினின்று நாலாவது சந்திரன்; இரண்டாவது நாளாகும். இம்முறையே எழுதினங்க ளும் வரும். மறுபடியு மிம்முறையே தினங்கள்வரும்.

80. சூரியனுடைய வீதியை 60-திற் பெருக்கியது நக்ஷத்திர மண்டலத்தின் வட்டமாகும். இம்மண்டலந்தான் எல்லாவற்றிற்கும் மேலே சுழலுகின்றது.

81. சந்திரன் ஒரு கல்பத்திற் பரிவர்த்தனஞ் செய்யுமெண்களைச் சந்திரவீதியி னிலக்கத்தாற் பெருக்கிய தொகை பிரமாண்டத்தின் மத்திய சுற்றளவாகும். இவ்விடங்கட்கெல்லாஞ் சூரியகிரணங்கள் பரவுகின்றன.

82. இதனையே யொருகிரகத்தின் பரிவர்த்தனத்திற்கிய அது அக்கிரகத்தின் வலயவளவாகும்.

83, 84. பூமி சக்கரத்தின் குறுக்களவாற் (diametre) *கிரகங்களினுடைய வலய அளவைப் (ordits) பெருக்கிப் பூமியின் சுற்றளவால் வகுக்கக் கிரகங்களின் வீதியளவைத்தரும். இதினின்றும் பூமி வட்டத்தின் குறுக்களவைக் கழித்து இரண்டுக்கீய ஈந்தபாகம் பூமியின் நடுவினின்றும் கிரகங்களுக்குள்ள தூரமாகும்.

85. சந்திரன் வீதியின் அளவு 324000-யோசனை. புதனுடைய சீக்கிரோச்சம் சந்திரனுக்கப்பால் 1043, 209.

86. அதற்கப்பால் சுக்கிரனுடைய சீக்கிரோச்சம், 2664637. புதனுக்குஞ் சுக்கிரனுக்குமப்பாற் சூரியனுக்கு 43,31500.

87. செவ்வாய்க்கு 8146909. துங்கனுக்கு 38328, 484.

88. குருவிற்கு 513,75,764. இராகுவுக்கு 80572,864.

89. சனிக்கு 127668255-ஸ்திரநக்ஷத்திரங்களுக்கு 259890012.

90. பிரமாண்ட கோளவிருத்தத்தின் சுற்றளவு.— 18712080864000000-யோசனை. இவ்வளவு தூரமுஞ் சூரியகிரணங்கள் வியாபிக்கின்றன.

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

* விட்டம் என்பர் சிலர்.

221

ஸ்ரீ:

ஐயவினாத்தொடர்

நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியை யபிமானித்து அதன் வளர்ச்சியைக் கருதி மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நடத்திவரும் நன்முயற்சிகள் பலவற்றுள்ளும் ஆங்கில கலாசாலை மாணவர்களை யவர்கள் படித்துவரும் சர்வகலாசாலைத் தமிழ்ப்பாடங்களிற் பரீக்ஷித்தும், தனித்தமிழ்ப் பரீக்ஷைக்கு வருபவர்களைச் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலைப் பாடங்களிற் பரீக்ஷித்தும் தேர்ச்சியறிந்து அவரவர் தகுதிக்கேற்பப் பரிசும், யோக்கியதாபத்திரமு மளித்தல் மிகச் சிறந்தது.

இது நந் தமிழ்நாட்டு மாணவர்களிற் பலரைத் தமிழ்கற்குமாறு ஊக்குகின்றது.

அங்ஙனம் கற்கமுயல்வாரிற் சிலர்க்கே தக்க கலாசாலைகளின் சேர்க்கையும், நல்லாசிரியர் போதனையும் கிடைக்கின்றன. அவற்றை யெய்தப்பெறாத பலரும் புத்தகங்களைப் படித்தே யுய்த்துணர்ந்து வருகின்றனர். அவருள் யானுமொருவனே. தமிழிலக்கிய விலக்கண நூல்களை யொருமுறை படிக்கும்பொழுது பலவிடங்களிற் பொருள்விளங்காவிடினும் பன்முறைபயிலச் சிலவிடங்களே பொருள் விளங்காதனவாகக் காணப்படுகின்றன. இந் நிகழ்ச்சி கற்பவர்களுக்கெல்லாம் ஒப்ப நிகழத்தக்கதே. அவையும் கற்ற பண்டிதர்களிடம் சென்று கேட்டுணரவே விளங்கிவிடுமாயினும் அங்ஙனங் கேட்டல் பெரும்பாலுமியலாமையாலும், கேட்ட வொருவருக்கே பயன்படுவதல்லது கேளாத பிறர்க்கும் பயன்படுந் தன்மையின்மையாலும் போதிய சாதகமாகப் புகலவிடமில்லை.

ஆதலால், தமிழ்க்கல்வியிற் றேறவிரும்புவோர் ஒவ்வொருவரும் தாம் படிக்கு மிலக்கிய விலக்கணங்களிற் பொருள்விளங்காத அரிய விஷயங்களைச் சிறிதுசிறிதாகச் செந்தமிழில் வினவிவந்தால் அவற்றைக்கண்ணுற்ற கற்றகேட்ட பண்டிதர்கள் கருணையாலெல்லோர்க்கு

மினிது பொருள்விளங்குமாறு செந்தமிழ்வாயிலாகவே விடையளிப் பாராயின் அது கல்வி வளர்ச்சிக்குப் போதிய சாதனமாகிப்பயன் படுமெனக் கருதி எனக்கு விளங்காத சில விலக்கண விலக்கிய விஷயங் களை "ஐயவினுத்தொடர்" என்ற தலைப்பின்கீழ் வரைந்துள்ளேன்.

அவற்றைக் கல்வியறிவுடையோர் கண்ணுற்று எளியேன்மீது கருணைகூர்ந்து விடையளித்துவருமாறு பன்முறை பணிவுடன் வேண்டுகின்றேன்.

இலக்கணம்

1. நன்னூல் மூலமும் காண்டிகை யுரையும்:—இதில் காண்டிகை யென்பது இடுகுறிப்பெயரா? காரணப்பெயரா? இவற்றுள் இன்ன தென்பதை விளக்கவேண்டும்.

2. விருத்தியுரை:—இதனுள் விருத்தி யென்ற பெயரையும் அவ் வாறு விளக்கல் வேண்டும்.

3. பற்பலர் தத்தமியற்பெயரைச் சாதி முதலிய பெயரோடு தொடர்புடையதாகக் கைச்சாத்துத் தீட்டும்பொழுது பலவேறு விகற்பவகையா லெழுதுகின்றனரே; அவற்றிற்கெல்லாம் இலக் கணங்க ளென்ன? உதாரணம்:— சொக்கலிங்கம் என்னு மியற் பெயருடன் செட்டியார், அல்லது பிள்ளை யென்னும் பெயர்களைச் சேர்த்து எழுதும்பொழுது (1)சொக்கலிங்கம் செட்டியார், (2)சொக் கலிங்கஞ் செட்டியார், (3)சொக்கலிங்க செட்டியார், (4) சொக்கலிங் கச்செட்டியார் (அல்லது பிள்ளை.) எனப் பலவாருக விகற்பித்தெழுது கின்றனர். இவற்றுட் சொக்கலிங்கச் செட்டியார் என்பதுபோல வல்லொற்று மிகுமாறெழுதுவதே வழாநிலையெனச் சிலர்கருதிச், சொக்கலிங்கம்பிள்ளை யென்பதுபோல முன்பு இயல்பாக வழங்கிவந்த பெயர்களையெல்லாம் சொக்கலிங்கப்பிள்ளை, வேலாயுதப்பிள்ளையென விகாரப்படுத்தி வருகின்றனரே; முன்னெழுதிவந்த வழக்குப் பிழை யுடையதா?

4. 'பிள்ளைப்பெருமாளையங்கார்' என்ற பெயரில் ஐயங்கார் என்ற சொல் பகுபதமா? பகாப்பதமா? இலக்கணமென்ன?

இலக்கியம்

(நைடதம் - அன்னத்தைக் கண்ணுற்ற படலம் - செய்யுள்-கூ.)

5. தாமரைமுகங்கள்வாட்டுந்தண்பனிக்காலந்தன்னிற்
காமர்வெம்பகனீட்டித்தவண்ணமுங்கணவர்த்தீர்ந்தோ
ரேமுறுவேனிற்காலமிரவுநீட்டித்தவாறுந்
தூமமென்கூந்தற்செவ்வாய்த்துடியிடை துயரவன்றோ.

இப்பாட்டினுள், தண்பனிக்காலமென்றது எந்த மாதங்களை? அவற்றுள் பகல் நீட்டித்தலெங்ஙனம்?

கணவர்த்தீர்ந்தோர் ஏமுறு வேனிற்காலம் என்றது எந்த மாதங்களை? அவற்றுள் இரவு நீட்டித்த லெங்ஙனம்? அந் நீட்டம் துடியிடை துயருறுதற் கேதுவாமா றெங்ஙனம்?

திருக்குறள்

6. திருக்குறளிற் பாயிரமென்று தொடங்கிக் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்னும் நான் கதிகாரங்களையும் முடித்து, முடிவிற் பாயிரமுற்றும் என்றெழுதப் பட்டிருக்கின்றது. இதற்குச் சான்றாக,

"வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்றேன் றூழ்—கூடுபொருள்
எள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை." எனத் திருவள்ளுவமாலையிற்

சிறுமேதாவியாரும்,

"பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—வாய
வறத்துப்பால் நால்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து."

என எறிச்சலூர் மலாடனாருங் கூறியிருத்தலானும் அந் நான்கதிகாரங் களையும் பாயிரமென வழங்குகின்றோமே. அப்பாயிரம் பொது,

சிறப்பு என்னுமிருவகையினு ளேதன்பாற்படும்; அதற்கிலக்கண மென்னை? அவ்விலக்கணம் நான்கதிகாரத்துள்ளும் பொருந்துமா றெங்ஙனம்.

"புதல்வரைப்பெறுதல்" (என்ற வதிகாரப்பெயர்க்கு)

7. "அஃதாவது இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக விறுக்கப்படுங்கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானுமல்லது இறுக்கப்படாமையின் அக்கடனிறுத்தற்பொருட்டு நன் மக்களைப்பெறுதல்" என்று விவரணமெழுதப்பட்டிருக்கிறதே. இவ் வதிகாரத்திற்கு, இருபிறப்பாளர் மூவரே யிலக்காகவும், நான்காம் வருணத்தவர் விலக்காகவுங் கொள்ளுதல் பொருந்துமா? விலக்காயின், திருக்குற ளுரைப்பாயிரத்துள்,

"ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய"
"வொழுக்கமே அறமென வெடுத்துக்கொள்ளப்பட்டது. அதுதான்"
"நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின்,"
"சிறுபான்மையாகிய சிறப்பியல் புகளொழித்துப், பெரும்பான்மை"
"யாகியபொதுவியல்புபற்றி இல்லறம்துறவறமென விருவகை நிலை"
"யாற் கூறப்பட்டது." என்பதுட னெவ்வாறு பொருந்தும்?

புறநானூறு

13-ம் பாட்டில் 13-வது வரியில்

8. "விழுநீர்வேலி நாடுகிழவோனே" என்பதில், நாடுகிழவோன் என்பதற்கு, நாட்டையுடையோன் என்று பொருள் எழுதப்பட்டிருக்கிறது. அங்ஙனமாயின் நாட்டுக்குற்றம், நாட்டுத்தலைவன் என்புழிப் போல நாட்டுக்கிழவோன் என வல்லொற்று மிகாதா? மிகாமைக்கு விதியாது? கிழவன் என்னுஞ் சொல்வி னீற்றயல் அகரம் ஓகார மாகிய தெங்ஙனம்?

(தொடரும்)

ஒரு மாணவச்சிறுவன்.

225

நாலடியா ராராய்ச்சி.

நாலடியார், தனித்தமிழ் நூலுள், இணையில்லாச் சிறப்புடைய தாகிய திருக்குறளுக் கிரண்டாவதாக எவராலுங் கொள்ளப்படும் அரிய பழையநூல். பழைய உரையாசிரியர் பலரும் தம் உரைகளில் திருக்குறளினின்றும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டி யிருப்பது போல, நாலடியாரினின்றும் பல மேற்கோள்கள் எடுத்துக் கையாண் டிருப்பதே நாலடியாரும் சிறந்த முதுநூலென்பதற்குப் போதுமான அறிகுறியாகும். அவ்வாறு சிறந்த நூலாகவிருப்பினும் இந்நூல் இயற்றியவரது பெயரும் காலமும் தெளிவுறக் கண்டறியப்படாது பலவாறு பலர் வாயிலும், செவியிலும்பட்டு ஒருவாறும் நிலைபெறாது ஊசலாடுகின்றது. திருக்குறளியற்றியவர், திருவுள்ளவர், அவர் தம்மவர் என்பர் ஜைனர்; அவர் திருவள்ளுவர், எம்மவர் என்பர் ஜைனரல்லாதாரிற் சிலர். அங்ஙனமின்றி நாலடியார் இயற்றியவர் ஜைனர்தாமென்னும் வாக்குக்கு எதிர்வாக்குக் கூறுபவர் ஒருவரு மிலர். நூலின்றுவக்கத்தில் அருகக் கடவுளைப்பற்றித் தெளிவுற வாழ்த்துக் கூறப்பட்டுளது.

நாலடியார் சங்கமருவிய நூலெனவும், ஆதலின் இற்றைக்கு ஏறக்குறைய விரண்டாயிர வருஷங்களுக்கு முற்பட்ட காலத்தின தெனவும் பொதுப்படப் பெரும்பாலார் நம்புகின்றனர். இச்சங்கத் தைப்பற்றி யாராயுமிடத்துச், சென்னையில் ஹைகோர்ட் ஜட்ஜிகளில் ஒருவராயிருந்த கனம் இன்னிஸ்துரை அவர்கள் கடைச்சங்ககாலம் ஏறக்குறைய கி. பி. 1100 (1112 - 1127-கி. பி.) வது வருஷமாக விருக்கவேண்டுமென "ஏஷ்யாடிக் குவார்ட்டர்லி ரிவியூ" என்னும் பத்திரிகையில், 1902-ஆ எப்பிரல் மாதத்தில் தாமெழுதியுள்ள நீண்ட வுபநியாஸத்திற் கண்டிருக்கின்றனர். கடைச்சங்ககாலம் திட்டமாக வின்னதென்று தற்காலம் சொல்ல முடியாவிடினும், இன்னிஸ் துரை அவர்கள் சொல்லியபடி கி. பி. 1100-வது வருஷ மாகாதென்பதற்குப் பலவாதாரங்கள் இப்பொழுது கண்டறியப்பட்

டிருக்கின்றன. (1)ஔவையார் அருளிச்செய்த நல்வழியில், "துங்கக் கரி முகத்துத்தூமணியேநீயெனக்குச், சங்கத்தமிழ்மூன்றுந்தா" வென்று கூறியிருத்தலின் சங்ககாலம் நல்வழியியற்றிய ஔவையார் காலத்திற்கு முற்பட்டதாகவே யிருத்தல்வேண்டும்; நல்வழியில் "தேவர் குறளுந் திருநான்மறைமுடிவு, மூவர் தமிழுமுனிமொழியுங்-கோவை, திருவாசகமுந் திருமூலர்சொல்லு,மொருவாசகமென் றுணர்" என்று சாற்றியிருத்தலின், குறளாசிரியருக்கும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் திருநாவுக்கரசு நாயனர் சுந்தரமூர்த்தி நாயனர் என்னும் சமயகுரவர் மூவருக்கும், திருவாசகமும், திருச்சிற்றம்பலக் கோவையாரும் அருளிச்செய்த திருவாதவூரடிகளுக்கும்,(அதாவது மாணிக்க வாசகருக்கும்) திருமந்திரமோதிய திருமூல நாயனருக்கும் ஔவையார் பிற்காலத்தினரேயாதல் வேண்டும்.

டாக்டர் கால்ட்வெல் துரை, தமது கம்பாரடிவ் கிராமர் (Comparative grammar) என்னும் புத்தகம் இரண்டாவது பதிப்பு, முகவுரை 138-வது பக்கத்தில் மூவர் பாடல்களும் கி. பி. 13-வது நூற்றுண்டின் இறுதியில் ஆக்கப்பட்டிருத்தல் கூடுமென ஐயமுறுகின்றனர். அவர் அவ்வாறு கொள்வது பிழைபடுகின்றது. ஏனெனில், கி. பி. 985—1016-ல் அரசாண்ட இராஜராஜதேவர் என்னும் சோழமகாராஜன் தாம் தஞ்சாவூரில் எடுப்பித்த பெரிய கோயிலிற் சமய குரவர்கள் மூவரின் விக்கிரகங்களமைப்பித்து, அச்செய்தியை அக்கோயிலிலுள்ள சிலாசாஸநங்களிலும் காட்டியிருக்கின்றூர். (தென்னிந்திய சிலாசாஸந வாராய்ச்சிப் பத்திரிகை, 2-வது புத்தகம், 3-வது ஸம்புடம், 152-வது பக்கம் பார்க்க.) ஔவையார் கி. பி. 11-வது நூற்றுண்டிலிருந்த குலோத்துங்க சோழன் காலத்திருந்தவரெனக் காலஞ்சென்ற சூரியநாராயணசாஸ்திரியார் "தமிழ் மொழியின் வரலாறு" என்னும் புத்தகத்தில் 105 - 106-வது பக்கங்களிற் கூறுகின்றனர். ஆதலின் கி. பி. 1100-வது வருஷத்திற்கு முற்பட்டகாலமே சங்ககாலமாகுமென்பது துணிபு.

(2) கி. பி. 898-ல் ஜைநபுராணமாகிய உத்தரபுராணஞ் செய்து முடித்த குணபத்திராசாரியரின் மாணுக்கரான மண்டலபுருஷர் செய்

துள்ள சூடாமணி நிகண்டுவில் "முத்தமிழை முன்னாள் வளர்த்த பாண்டியனே போல" எனக்கூறியிருத்தலின், பாண்டியவரசரால் முத்தமிழ் வளர்க்கப்பெற்றது, கி. பி. 10-வது நூற்றாண்டுக்கு நீண்ட காலம் முந்தியதே யாகுமெனத் துணிந்துகோடற்பாலது. (தமிழகம், ஸம்புடம் 1-ல் 1905-மார்ச்சு மாதத்திய நம்பர் 3-பார்க்க). "முத்தமிழை முன்னாள்வளர்த்த பாண்டியனே போல" வென்பது சங்கத்தைப் பாண்டியவரசர்கள் வளர்த்ததையே குறிப்பதாகும்.

(3) சங்கமிருந்ததென்பது சாஸநங்களாலும் வெளியாகின்றது. மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகாவைச் சேர்ந்த சின்னமனூரிலிருந்து ஐந்தாறு வருஷங்களுக்குமுன் பாண்டியவரசர்களின் இரண்டு செப்புப்பட்டயங்கள் கிடைக்கப்பெற்றன. அச் செப்புப் பட்டயங்களிரண்டும் ஒரே அரசரது ஆளுகையில் வரையப்பட்டனவாகும். அவ்வரசரது பெயர் இராஜஸிம்மன் II. மந்தர கௌரவ அபிமானிமேரு. அவ்வரசருடைய முன்னோர்களில் எண்மர் பெயர்கள் அச் சாசனங்களில் குறிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கும் முன்னிருந்தவர்களின்பெயர்கள் குறிக்கப்படாவிடினும், அம்முன்னோர்கள் தலையாலங்கானம் என்றவிடத்தில் இரண்டரசர்களுடன் பொருது வெற்றியடைந்தவர்களெனவும், பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தவர்களெனவும், தமிழ்ச்சங்கம் தாபித்தவர்களெனவும் அச் சாஸநங்களில் ஒன்றிற் கூறப்பட்டுளது.

இவ் விஷயங்கள் காலவரிசைப்படி இங்குக்கூறப்பட்டனவாக நாம் கொள்ளவிடமில்லை. இச் சாஸநம் இராஜஸிம்மன் II, மந்தரகௌரவ அபிமானமேரு என்ற அரசர் பட்டம்பெற்றுப் பதினாறுவது வருஷத்தில் வரையப்பட்டது. அது தவிர வேறுகாலம் குறிக்கப்படவில்லை. சாஸநவெழுத்துச் சோதனையில் இச் சாஸநம் ஏறக்குறைய கி. பி. 10-வது நூற்றாண்டில் வரையப்பட்டதாகத் தோன்றுகிறது. தலைமுறை யொன்றுக்கு இருபதுவருஷம் வைத்து நோக்கின், இச் சாஸனத்திற் கண்டுள்ள முதலரசன் 8-வது நூற்றாண்டிலிருந்தவனாவான். அதற்கும் முற்பட்டதாகவேண்டும் சங்ககாலமென்பது தெளியலாகுமென மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் வெங்கய்யா அவர்கள் கூறியிருப்பது 1906—07-வது வருஷத்துச் சாஸநவாராய்ச்சி அறிக்

கைப் பத்திரத்தில் 64--66 பக்கங்களிற் காணலாம். ஆதலின் கடைச் சங்ககாலம் இன்னிஸ் துரையவர்கள் சொற்றவாறு கி. பி. 1100-வது வருஷமன் றென்பதற்கு இங்கெடுத்துக் கூறிய வாதாரங்களே போதுமானவை.

நாலடியாரிலுள்ள செய்யுட்கள் யாவும் தனித்தனியே ஜைந முனிவர்கள் பலரால் ஒருகாலத்திலியற்றப்பெற்றுப், பின்னொருகாலத் துப் பத்மனார் என்னும் ஜைநமுனிவரால் அதிகார அடைவிற்றொகுத் தமைக்கப் பெற்றதென்பர் பலரும். நாலடியார் பதினேண் கீழ்க் கணக்கினுள் முதுநூல் என்பாரும் சிலருளர். பதினெண்கீழ்க்கணக் கணக்கினுள் முதுநூலாகக் கொள்ளப்படின், திருக்குறளினும் நாலடி யார் முற்பட்டதென அவர் கொண்டதாகும். மணிமேகலையில் திருக் குறள் மேற்கொள்ளப்பட்டமையின், மணிமேகலையினும் திருக்குறள் முற்பட்டதென்பது துணிபு. மணிமேகலை சிலப்பதிகாரத்தின்றொடர் ச்சியானதுபற்றியும் இவ்விரு காவியங்களையுமியற்றிய சீதள சாத்த னாரும் *இளங்கோவடிகளும் ஒரே காலத்தினரானதுகொண்டும் இவ் விரு காவியங்களுக்கும் திருக்குறள் முற்பட்டதென விளங்கும்.

ஆதலின் திருக்குறள் சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இந் நூல்களுக்கெல்லாம் நாலடியார் முற்பட்டதென்று முடியும். இவ் வாறும் அவர்களது கருத்தாகுமோ வென யாமறியேம். நாலடியார் பதினெண்கீழ்க்கணக்கினுள் முதுநூலெனக் கொள்பவர்கள், "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப், பால்கடுகங் கோவை பழமொழி- மாமூல, மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே, கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு." என்னுமொரு வெண்பாவில் நாலடியார் முத லிற் கூறப்பட்டுள்ளதைத் தம் கூற்றுக் காதாரமாகக் காட்டுவர்போ லும்.

இவ்வெண்பாவிற் சங்கத்தைப்பற்றி யாதொன்றுமே கூறப்பட வில்லை. இச்செய்யுளமைத்தவர் நூல்களைக் காலவரிசைப்படியே செய்யுள்லமைத்தாரென நாம் எவ்வாறு கொள்ளக்கூடும்? தனித்

* சீதலர் பத்தாவது தீர்த்தங்கருடைய பெயர். சாந்தனார், அருகக் கட வுளின் பெயர். சாத்தன் புத்தக் கடவுளுக்கும், அய்யனாருக்கும் பெயராக வும் வழங்குவதுண்டு.

தனியாகச் சிதறுண்டு கிடந்ததாகச் சொல்லப்பட்ட நானூறு செய்யுட்களையும் ஒருசேரப் பதுமனார் என்பவர் தொகுத்து ஒரே நூலாக்கிய பின்னரன்றோ நாலடியார் என்னும் பெயர் அந்நூலுக்கு வழங்கப்பெற்றிருத்தல்வேண்டும். அப்பெயர் வழங்கப்பட்ட காலத்திற்கும் பிற்பட்டதாகும் மேலேகாட்டிய வெண்பா வென்பது சொல்லாமலே விளங்கும். இவ்வெண்பா செய்யுட் போக்கைத் தழுவி நூல்களின் பெயர்களைத் தமக்கிசைந்தவாறடுக்கிப் பிற்காலத்தில் எப்பொழுதோ எவராலோ இயற்றப்பெற்றிருத்தல் வேண்டும். ஆதலின் நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கினுள் முதுநூலெனக் கோடலியலாது.

நாலடியார் கூன்பாண்டியன்காலத்துத் திருஞானஸம்பந்தஸ்வாமிகளுடன் அனல்வாதஞ்செய்து தோல்வியடைந்து புனல்வாதஞ்செய்யப்புகுந்த ஜைநமுனிவர்களால் ஆக்கப்பட்டதென்பர் வேறு பலர். அவரது கொள்கை உண்மையெனக் கொள்ளப்படின் நாலடியாரின் காலம் கி. பி. 7-வது நூற்றாண்டென்று முடியும். ஞானசம்பந்தஸ்வாமிகளின் காலம் பல பல போராராய்ச்சிகளைக்கொண்டு கி. பி. 7-வது நூற்றாண்டின் றுவக்கமெனக் காலஞ்சென்ற திருவனந்தைச் சுந்தரம்பிள்ளையவர்களும், பின்னும் தக்க வாதாரங்களைக்கொண்டு கி. பி. 7-வது நூற்றாண்டின் மத்தியகாலமென கவர்ன்மெண்டு எபிகிராபிஸ்ட் மகா-௱-௱-ஸ்ரீ ராவ் பகதூர் வெங்கய்யா அவர்களும் கண்டறிந் தெழுதியிருக்கின்றனர். ஞானஸம்பந்தரின் காலம் கி. பி. 7-வது நூற்றாண்டென அவ்விருவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதேயாகும். (Vide Tamil Antiquary No. III.)

நாலடியாரின் காலத்தைப்பற்றி மேலே காட்டியபடி நம்மவர்களின் வாய்மொழிகள் பலவாறு வேறுபட்டு ஒன்றோடொன்று முரண்பட்டு நிற்க மற்றொருபக்கம் காலஞ்சென்ற டாக்டர் போப் என்னும் பாதிரியார் தாமச்சிட்டு வெளியேற்றிய திருக்குறளின் முகவுரையில் ஐரோப்பாவினின்றும் மேனாட்டுக் கிறிஸ்தவர்கள் சென்னையிலுள்ள மைலாப்பூரில் வந்திறங்கத் துடங்கிய பின்னர் அவர்களது கூட்டுறவால் வாய்ந்த நல்லறிவின் பயனாக கி. பி. 800-வது 1200-வது வருஷங்களுக்கிடைப்பட்ட காலத்திற் (பெரும்பாலும்

கி. பி. 11-வது நூற்றாண்டில்) குறளாசிரியரால் திருக்குறள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும், நாலடியாரிலுள்ள சில செய்யுட்கள் திருக்குறளுக்கு முற்பட்ட காலத்தனவாகவும், சில செய்யுட்கள் பிற்பட்ட காலத்தனவாகவுமிருத்தல் வேண்டுமெனவும் ஓராதாரமுமின்றித் தம் மனதுக்குத் தோன்றியபடி எழுதியிருக்கின்றனர்.

நாலடியாரிலுள்ள செய்யுட்களில் இது திருக்குறளுக்கு முற்பட்டதெனவும், இது பிற்பட்டதெனவும் எடுத்துக்காட்டாதொழிந்தனர். ஆதலின் ஆதாரமற்ற பொருந்தாக் கூற்றுக்களையெல்லாமொருபுறமொதுக்கி அந்நூலினுள்ளிருந்தே அதன் காலத்தைக் கணக்கிட்டறிய வழிகளுமுண்டோ வெனச்சிறிதிங்காராய்வாம்.

நாலடியாரில் 200-வது 296-வது செய்யுட்களில் பெருமுத்தரையர் என்னும் ஒருவர் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளாரென்பது அறிஞர் எவரும் அறியாததன்றேயாகும். அச்செய்யுட்கள் தாழ வருவன.

“ பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்.” நாலடியார் ௨௦௦.

“ மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதவர் நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார். நாலடியார் ௨௯௬.

இச்செய்யுட்களியற்றப்பெற்ற காலத்துப் பெருமுத்தரையர் என்னும் பெயர்பூண்டு சிறப்புற்றுவிளங்கியவர் ஒருவரிருத்தல் வேண்டுமெனத் தெளியலாகும். பண்டைக்காலத்துப் பாண்டியவரயர்களுள் முத்தரையர் என்று பெயரிய ஒரு வகுப்பினரிருந்தனரென்பது சாஸநவாராய்ச்சிகளால் வெளியாகின்றது.

புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்துள்ள குடுமியான்மலைக் கோயிலிற், சடையன் மாறன் என்ற பாண்டியவரசரின் ஆட்சியின் 21-வது வருஷத்திற் சத்துருபயங்கர முத்தரையன் என்னும் பாண்டியநாட்டரசரொருவருடைய தேவியாராற் கோயிற்றிருவிளக்குக்காகக் கொ

டுக்கப்பட்ட தாநசாஸநமொன்று வெட்டப்பட்டுளது. தஞ்சாவூருக்கு வடமேற்கிலுள்ள சந்தலைக் கோயிலில் குவாவன் மாறன் பெரும்பிடுகு முத்தரையன் பேரனும், மாறன் பரமேசுவரன் இளங்கோவடி வரையன் மகனுமாகிய சுவரன் மாறன் பெரும்பிடுகு முத்தரையன் என்னும் பாண்டியவரையரை யக்காலத்துப் பாவலர் நால்வர் புகழ்ந்துபாடிய இருபத்தேழு பாடல்கள் கற்கம்பங்களில் வெட்டப்பட்டுள்ளன. இக் கற்கம்பங்களினடிப்பக்கங்களின் பெரும்பாகம் நெடுங்காலமாகத் தரைக்குட் புதைந்துகிடந்தமையின் ஆங்கிருந்த வெழுத்துக்கள் மண்டின்றழிவுற்று மாறுபட்டு உருக்குலைந்துபோயின. ஆதலின் ஆங்குள்ள பதினறுபாடல்கள் பெரும்பாலும் விளங்காமற்போயின.

எஞ்சிய பதினெரு பாடல்களும் கற்கம்பங்களிற்றரைக்கு மேலுள்ள பகுதிகளில் நெடுந்தூரம் ஆங்காங்கு உடைந்து சிதைந்து போயினமையின் ஆதியோடந்தம் மூன்று பாடல்கள் மட்டுமே நன்கு விளங்குகின்றன. எஞ்சிய எட்டுப்பாடல்களில் எழுத்துக்களுருவங் கெட்டு உடைந்து சிதைந்துபோன பகுதிகள் எவ்வாற்றானும் உருவாக்கவியலாவென்றே தோன்றுகின்றன. மேற்கூறிய பாண்டிய வரையர்களின் பெயர்களை இதனடியில் வருமாறு பொருள்படுத்தலாகும்.

1. குவாவன் மாறன் பெரும்பிடுகுமுத்தரையன்
(=குவாவன் மகனான மாறன் என்னும் பெயரிய பெரும்பிடுகு முத்தரையன்.)

|

2. மாறன் பரமேசுவரன் இளங்கோவடிவரையன்
(=மாரன் மகனான பரமேசுவரன் என்னும் பெயரிய இளங்கோவடிவரையன்)

|

3. சுவரன் மாறன் பெரும்பிடுகு முத்தரையன்
(=சுவரன் அதாவது பரமேசுவரன் மகனான மாறன் எனப் பெயரிய பெரும்பிடுகு முத்தரையன்.)

சுவரன் மாறன் பெரும்பிடுகு முத்தரையனே சந்தலைக்கு மேற்கிலுள்ள நியமம் கிராமத்து மாகாளம்கோயில் எனப்படும் பிடாரி

கோயில் எடுப்பித்தவன். இப் பிடாரிகோயிலுக்குத் தமதாட்சியின் பதினெட்டாவது வருஷத்தில் நிலம் மானியம்விட்டதாக மேற்படிச் சந்தலைக்கோயிற் சிலாசாஸநமொன்றிற் கண்டுள்ள இளங்கோ முத்த ரையன் என்பவன் இவனே யாவனெனத் தோற்றுகின்றது. அஃ தெவ்வாறெனின் மேலே காட்டியுள்ளவாறு இளங்கோ முத்தரையன் என்பதற்கு இளங்கோவின் (அதாவது இளங்கோவடிவரையனுக்கு) மகனான முத்தரையன் எனப் பொருள்கொள்ளலாகும். இளங்கோ வடிவரையன் என்ற தகப்பன்பெயர் மகன்பெயருக்கு முன் வைக் கப்பட்டமையின் இளங்கோவெனக் குறுகியதுபோலும். ஆயினும் வேறு ஆதாரமொன்றுமேயின்றி இவ்வகை யூகங்கொண்டே இப் பெயர்களிரண்டும் ஒன்றேயாகுமென எவ்வாறு துணியலாகுமென வினவுதற் கிடமுண்டாகும். ஆதலின் யாம் கொண்ட வூகம் எவ்வா றாயினுமாகுக.

•

பிடாரிகோயிலுக்கு மானியம்விட்ட இளங்கோ முத்தரையன் என்பவன் சுவரன் மாறன் பெரும்பிடுகு முத்தரையனல்லாது வே றொருவனாக விருப்பின் அவன் சுவரன் மாறன் பெரும்பிடுகு முத்த ரையன் குலத்தவன் என்பதனையும், அவனுக்குப் பிற்காலத்தவன் என் பதனையும் ஒருவரும் தள்ளாது கொள்ளலாகுமென்பதற் கையமில்லை. இளங்கோ முத்தரையனது சிலாசாஸநமொன்று தஞ்சாவூருக்கு வடக் கிலுள்ள திருச்சத்துரைக் கோயிலிலும் வெட்டப்பட்டுளது. ஆனது பற்றி அக் காலத்திற் பாண்டியநாடு சோழநாட்டையும் உட்கொண் டிருந்ததென்பதனை யறியலாகும். சுவரன் மாறன் பெரும்பிடுகு முத்தரையனின் சாஸநவெழுத்துக்களைக்கொண்டு அவனதுகாலத்தை யொருவாறு மதித்துக் கணக்கிடின் அவனது காலம் ஏறக்குறைய எட்டாவது நூற்றாண்டெனலாமென்று கூறுகின்றனர் சாஸந வா ராய்ச்சியிற் றேர்ந்த பண்டிதர்கள். இது நிற்க.

தெள்ளாறு என்னுமிடத்திற் றம் பகைவரைவென்ற நந்திப் போத்தரையர் (நந்திவன்மன் பல்லவ மல்லன்) என்ற பல்லவ அரசர் தமதரசாட்சியின் பன்னிரண்டாவது ஆண்டில் நியமம் பிடாரிகோயி லுக்கு நிலம் மானியம் விட்டதாகக் கண்டுள்ள சாஸநமொன்று சந்தலைக்கோயிற் கற்கம்பங்களில் வெட்டப்பட்டுளது. தெள்ளாறு

என்னுமிடத்தில் நிகழ்ந்த சண்டையில் இப்பல்லவ அரசருக்குப்பகைவராக வெதிர்த்திருந்தவர் கி. பி. 732-முதல் 743-வரையில் ஆட்சிசெலுத்திய சௌளுக்கிய மேனுட்டரசனை இரண்டாவது விக்கிரமாதித்தன் என்பவர். சுவரன் மாறன் பெரும்பிடுகு முத்தரையன் எடுப்பித்த பிடாரிகோயிலுக்கு கி. பி. 732—743-ல் அரசுசெய்த சௌளுக்கிய மேனுட்டரசனை விக்கிரமாதித்தனைத் தெள்ளாற்றில் வென்ற நந்திப்போத்தரையர் மாநியம் விட்டிருப்பதனுற் சுவரன் மாறன் பெரும்பிடுகு முத்தரையன்காலம் கி. பி. எட்டாவது நூற்றூண்டின் ருெடக்கமாதல் அல்லது அந் நூற்றூண்டுக்குச் சிறிது முற்பட்டதாதல் வேண்டுமெனத் துணியலாகும். பாரதம்பாடிய பெருந்தேவனுரை யாதரித்தவரும் நந்திக்கலம்பகத்தின் கதாநாயகரும் இந் நந்திப் போத்தரையரே யாவர். தேள்ளாற் றெறிந்த இந் நந்திப்போத்தரையரின் மற்றெருரு சிலாசாஸநம் அவராதாட்சியின் இருபத்திரண்டாமாண்டில் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கிலுள்ள திருப்பாற்றுறைக்(திருப்பளாத்துறை,கோயிலில் வெட்டப்பட்டுள்ளது.

(தொடரும்.)

குப்புசாமி சாஸ்திரி.

உ

வானசாஸ்திரம்.

(ருரு - ஆம்பக்கத்தொடர்ச்சி.)

முன்னோர்கள் பதினேழாம் நூற்றூண்டின் மத்தியிற் சூரியனுக்கும் பூமிக்குமுள்ள தூரம் 91430000 மைல் எனக்கணக்கிட்டிருந்தார்கள். இந்தக்கணக்கிற்கு முக்கியமாயிருக்கும் சலனவித்தியாசங்கள் (Parallax) பலவிதமாகக்கணக்கிடப்பட்டிருந்தன. அநேககாலம்வரை யிச் சலனவித்தியாசங்கள் சரிவரத் தெரியாமலிருந்தன. பிறகு சுக்கிரன் சூரியனை மறைத்து ஓடுவதினின்று கணிக்கப்பெற்றது. 8. 578 விகலை

1. செவ்வாயைக்கொண்டு (Winnecke)
வின்னிக் என்பவர் கணித்தது. 8. 964

... ... வெவெர்ரியே... ... 8. 950

1822—24 சோதனைசெய்து எங்க் (Encke)
என்னும் ஜர்மன் நிபுணர் கண்டது. 8. 5776

இந்த வருஷம் ஜூலைமாதத்தில் வெளியிட்ட பத்திரிகைகளில் எரோஸ் என்னும் நக்ஷத்திரமொன்று சூரியனை மறைத்து ஓடினதினின்றும் ஆர்தர் ஹிங்க்ஸ் (Hinks) என்பவர் கணித்தது. 8. 806

இந்த வித்தியாசங்கள் வெகு அற்பமேயாயினும் தூரவித்தியாசங்கள் அதிகமாகவிருக்கின்றன. ஒரு மயிரிழை 125 - அடிக்கு மேற் றெரியாதென்றால் இந்த வித்தியாசத்திற்கு எவ்வளவாகுமென நீங்களே யறிந்துகொள்ளலாம். எங்கின் கணிதப்படி 953000000 எனக்கணக்கிட்டார்கள். ஆர்தர் ஹிங்க்ஸ் கணக்குப்படி 149228000 கிலோமெத்தர் (இங்கிலீஷ் 5 பர்லாங்குகொண்ட ஒரு பிரஞ்சு அளவு) அல்லது 92725802 மையிலெனக்கணக்கிட்டிருக்கின்றனர். இன்னும் இதனை நிர்த்தாரணஞ்செய்ய அதிக சீக்கிரத்திற்செல்லக்கூடியதெனக்கணக்கிடப்பட்டிருக்கிற சூரியனது ஒளி, ஒரு மணியில் ஆறுயிரத்தறுநூறுபாகமான ஒரு செகண்டுக்கு 185000 மைல்வீதம் செல்லுகிறது. சூரியனிடத்திலிருந்து ஒளி நமக்கு எட்ட 8 நிமிஷம் 17 செகண்டுதான் என்றால் இதன் தூரம் சுலபமாக அறிந்துகொள்ளலாம். அப்படியாயின், அங்கு தோன்றும் ஒலிகளும் காதாற்கேட்கலாமென்றாலோ, ஒரு பெரிய சப்தம் உண்டாவதாகவேகொண்டாலும், சப்தம் காற்றின்வழியாகச் செகண்டு ஒன்றுக்கு 1115 அடியே செல்லுவதால், நமக்குச்சூரியனிடமிருந்து உண்டாகும் சப்தம் கேட்கப் பதினான்கு வருஷம் செல்லும். இதற்கு ஒரு சிறு உதாரணங் காணலாம். சாதாரணமாக ரயில்வே லயனில் நின்று ரயில் வரும் சமயங்களிற் பார்ப்போமாயின், சுமார் ஒரு மைல் தூரத்திற்கப்பால் வண்டி வரும்போது ரயில்வே கைகாட்டிமரம் தணியாமலிருக்குமாயின், அதனைக்கண்ட இஞ்சினிலிருக்கும்

டிரைவர் அந்த இஞ்சினிலுள்ள சப்தம் செய்யும் இயந்திரத்தைத் திறந்து சப்திக்கும்படி செய்யும்போது நீராவிவெளியே போவதை யுடனே காண்கிறோம். ஆயினும் அதனாலுண்டாகும் சப்தத்தைச் சிறிது நேரம் கழித்துத்தான் கேட்கிறோம். ஆகையால், ஒலி மெது வாயும் ஒளி வேகமாயும் செல்லுகின்றது. ஒன்றிலிருந்து மற் றொன்றுக்குத் தூரந்தெரியுமாயின், அதனுடைய விஸ்தீரணம் இவ் வளவென அங்ககணிதத்தாற் (Geometry) கண்டுபிடிக்கலாம்.

இதற்கு ஒரு சிறு உதாரணம் காட்டுகிறேன். நான்கு அங்குலம் அகலமுள்ள விருத்தமான ஒரு அட்டையையெடுத்து நிறுத்தி வைத்துச் சூரியனை மறைக்கும்படியாகச் செய்வோம். அந்த அட் டையும் சூரியனும் மறையும்படியாக நாம் பார்ப்போமாயின் வரவர நகர்ந்துசெல்லவேண்டும். இப்படி முழுதும் மறைபட 36 - அடி பின்னே செல்லவேண்டும். 36 - அடிக்கு 4-அங்குலமானல் மேலே கூறிய தூரத்திற்கு 852900 மைல் குறுக்களவிலுள்ளது என் றேற்படும். அதாவது, பூமியை விட 108 - மடங்கு அதிகமான குறுக்களவையுடையது சூரியன். இன்னும் சூரியனும் பூமியும் ஒன்றின்மேலொன்றிருப்பதாகக்கொண்டு பூமிக்கும், சந்திரனுக்கும் சூரியனுக்குமுள்ள வித்தியாசத்தைப் பார்ப்போமாயின் சந்திரன் சூரியனுக்கு உள்ளடங்கியே காணப்படுவதோடு இதற்கு மதற்கு முள்ள தூரம் பூமியைப்போல் இருபத்தாறுபங்கு குறுக்களவு மத்தி யிலேற்படும். சூரியனது பரப்புத்தெரியவே அதனுடைய கனம் எவ்வளவெனக் கவனிப்போமாயின், 12527000 மடங்கு பூமியை விடக்கனமானது. அதாவது, மற்றைய எல்லாக்கிரகங்களும் சேர்ந்து கூடின கனத்திற்கு 600-மடங்கு அதிகமானது. இவ்வளவு கன முள்ளதும் பெரிதுமாயிருப்பினும் பூமியைப்போல அடர்த்தியான தன்று.

முன்னல் சூரியனை மப்புமாசுகள் மறைக்கும்போது பார்ப் போமாயின் விருத்தமாக ஒளியுடன் காணப்படுவதாகச் சொல்லப் பட்டது. அதனை விசேஷப்பெருமையுடன் காட்டாததாயினும், கூடியமாத்திரம் பெருமைப்படுத்திக் காட்டக்கூடிய தூரதிருஷ்டிக் கண்ணாடிகொண்டு உற்றுப் பார்ப்போமாயின், சில கறுப்புப்புள்

ளிகள் காணப்படும். இவைகள் " ஆதித்திய வடுக்கள் " (Sun-spote) என்று சொல்லப்படும். இவை சூரியமண்டலத்தில் ஒரே இடத்தில் நிலையாயிராமல் இடம்விட்டுக் கிரமமாகப் பெயர்ந்துசெல்லக் கூடியவை. அவைகளை ஊன்றிப்பார்ப்பதால் வெகு விஷயங்கள் புலப்படுகின்றன.

மேலே கூறியபடி ஆதித்தவடுக்கள் ஒவ்வொரு காலங்களிற்றோன்றுகின்றன. மேல் நாட்டார் 1840 முதல் 1850 வரையில் இடைவிடாமற் பத்துவருஷத்தில் 1982 நாட்களிற் சூரியனைச்சோதிக்க, 372 நாட்களிற்றான் வடுக்கள் காணப்படவில்லையென்றெழுதுகின்றனர். ஒரே காலத்தில் ஒவ்வொரு சமயம் 80 புள்ளிகள் வரை காணப்பட்டிருக்கின்றன. இதைப்போலவே சிலசமயம் ஒருவருஷகாலம்வரை வடுவே காணப்படாமலிருந்ததுமுண்டு. ஆயினும் மேல் நாட்டார்களிற்சிலர் இப்படி ஒருவருஷம் வரையில் வடு ஒன்றும் தோன்றவில்லையென்பது பார்ப்போரது கவனக்குறைவால் நேர்ந்ததேயொழிய இடைவிடாமல் ஒருவருடகாலம் வடுக்கள் காணப்படாமலிராவென அபிப்பிராயப்படுகின்றனர். இவ்வடுக்கள் ஒரு கணக்காகவே சஞ்சரிப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றன. இதனைக்கொண்டு பூமிக்கும் அதற்குமுள்ள சம்பந்தமும் சொல்லும்படியாக ஏற்பட்டிருப்பது அதிசயிக்கத்தக்கது. இப்பருக்களை இடைவிடாமல் உற்றுநோக்கியபோது இவை உருவிலும் ஸ்தானத்திலும் பேதமடைகின்றனவெனக் காணப்படுகின்றன. இப்படியுண்டாகும் பேதங்களும் இஷ்டமானபடி தோன்றாது ஒரு வரிசையாகத்தோன்றுவதால், சூரியமண்டலமும் தன்னைத் தானே சுற்றிப் பிரமணம் செய்வதாக ஸ்தாபிக்கப்படுகிறது.

தூரதிருஷ்டிகொண்டு மறுபடியும் பார்ப்போமாயின் சூரியனது கீழ்புறம் வலக்கைப்பக்கமாகவும், மேல்புறம் இடக்கைப்பக்கமாகவும் தோன்றும். தென்புறம் தலைப்பக்கமாயும், வடபுறம் கீழுமாகத்தோன்றும். அதாவது கண்ணாடிவழியாகப்பார்க்கும்போது தலைகீழாகத்தோன்றும். திருஷ்டாந்தமாக தியாடலைட் அல்லது லெவல்கண்ணாடி (Levellinginstrument)வைத்துப்பூமிமட்டத்தைச் சோதிக்கும்போது, அம்மட்டத்தைக்கணக்கிட நம்பர் குறித்த

பலகையொன்று தூரத்திற்பிடிக்கப்படுவதை நீங்கள் கண்டிருக்கலாம். அதற்கு லெவலிங்ஸ்டாப் (Levelling staff) என்று பெயர். லெவல் கண்ணுடி வழியாக அதனைப் பார்க்கும்போது, பிடித்திருப்பவன் முதல் எல்லாம் தலைகீழே நிற்பதாகப் புதிதாக அதனைப் பார்ப்போருக்குத்தென்படும். சாதாரண கண்ணுடியில் நம்மைப்பார்க்கும்போது வலக்கை இடக்கையாகவும், இடப்புறம் வலப்புறமாகவும் காட்டக் காண்கிறோம். பிரதிபலிக்கும் பொருள்களின்குணமே இதுவாகையால் தூரதிருஷ்டிக்கண்ணுடியிற் காணும்போது வலப்புறமிருந்து இடப்புறஞ் செல்லக் காண்போமாயின் மேற்கேயிருந்து கிழக்கே செல்லுவது நிதர்சனமாகிறது.

ஒரு வடுவை நாம் கீழ்பாகத்திற் காணும்போது கோழிமுட்டை வடிவாகக்கண்டோமாயின் அது மேல் புறம் செல்லச் செல்ல வரவரப் பருத்து விருத்தாகாரமாகி, மத்தியத்தை விட்டுத்தாண்டியதும் மறுபடியும் கோழிமுட்டைபோல் நீட்டம் கொடுத்து மறையக் காண்கிறோம்.

(தொடரும்)

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

உ

ஸ்ரீ ஜகத்குரவே நம:।

ஸ்ரீ ஶாரதாம்பா

ஜகத்குரு அவர்கள்

விதேக கைவல்யமடைந்தது.

எல்லாத் தர்மங்களும் ஒன்றுகூடி உருவெடுத்துவந்தனபோல இப்புவனத்திற்றோன்றிச் சிரௌதம் ஸ்மார்த்தம் என்னு மிருவித நித்திய நைமித்திக கர்மங்கள் இந்நாட்டிற் குன்றாது தழைத்தோங்கும் வண்ணம் தம்முடைய நல்லொழுக்கங்களாலும், அளவற்ற சாஸ்திர ஆராய்ச்சியோடு செய்துவந்த உபதேசங்களாலும் மாநிடர்கள் நெறி

வழுவாது நடப்பதற்கோர் ஆக்ஞாசக்கிரமாகச் சிருங்ககிரியில் ஆயிரங் கிரணங்களுடன் பிரகாசித்துவந்த சூரியனாகிய ஜகத்குரு ஸ்ரீசச்சிதானந்த சிவாபிநவ நரசிம்மபாரதீ யோகீந்திரர், நடைபெறும் விரோதி கிருது-ஷ மீன-மீ 8உ ஸௌம்யவாரம் பகல் பனிரண்டரை நாழிகைக்குப் புண்ணியார்ஜிதமான தம்முடைய பௌதிகதேகத்தைத் தம்முடைய யோகவலியால் ஒழித்துப் பிர்மவடிவான தம்முடைய திவ்ய ஸ்வரூபத்துடன் இனித்திரும்புதலற்ற நிலையாகிய பிர்மபதவியை அடைந்தார்கள்.

அவர்கள் பாலவயதிலேயே ஸந்யாஸ ஆச்ரமத்திற் புகுந்து அவர்களுக்கு முன்னிருந்த ஜகத்குரு அவர்களால் ஆசாரிய பீடத்திற்குப் பரம அர்கரென்று தெரிந்தெடுக்கப்பட்டும், தமக்குப்பின் ஆசாரியஸ்தானத்தை வஹித்துச் சிருங்ககிரி மடாதிபதியாயிருந்துவரும்படி நியமிக்கப்பட்டும், அவர்கள் மனமுவந்து கொண்டாடத்தக்க சிஷ்யராகவிருந்து அவர்களிடத்திலேயும், அந்த மடத்தை ஆச்ரயித்துக் கொண்டிருந்த பற்பல பண்டிதர்களிடத்திலேயும் முறைவழுவாது அத்தியயனம் செய்து வேதம், பூர்வமீமாம்சை, வேதாந்தம், தர்க்கம் அலங்காரம் முதலிய சகல நூல்களையும் நன்கு கற்று இவர்களுக்குச் சமானம் முன்னம் ஒருவர் இருந்ததுமில்லை இனிமேல் ஒருவர் உண்டாகப்போகிறதுமில்லை யென்கிற பெரும்புகழைப் பெற்று விளங்கிவந்ததுமன்றிப் பூர்வஜகத்குரு அவர்கள் ஸித்தியடைந்தபிறகு இவர்களே மடாதிபதியாகிச் சந்திரமௌளீசுவரர், சாரதாதேவி முதலிய தெய்வங்களுக்கு அம்மடத்தின் பரம்பரை வழக்கத்துக்குக் குறைவில்லாமற் சகலவித கைங்கரியங்களையும் நடத்திச், சகல ஜனங்களையும் ஆனந்தப்படுத்திக்கொண்டு பூர்ணசந்திரனைப் போலப் பிரகாசித்து வந்தார்கள்.

இவர்கள் விளங்கிவந்த ஸ்தானத்துக்கு மூன்று பதவிகள் அமைந்துள்ளன: அவைகள், (1) ஸன்னியாஸ ஆச்ரமம் (2) ஆசார்யஸ்தானம் (3) மடாதிபத்தியம் என்பன. இந்த மூன்று பதவிகளில் அவர்கள் எவ்வித வழுவுமின்றி நடந்துவந்த அற்புதத்தை இவ்வாறென்றுரைப்பது சாத்தியமன்று: ஸன்னியாஸ ஆச்ரமத்துக்கு ஏற்பட்டிருக்கும் கடமைகள் ஒன்றும் தவறாது சாந்தம், பொறுமை, வைராக்

யம், தவம், சிந்தனை இவைகளெல்லாம் பெருகிநிறைய ஒப்பற்ற புனிதத்துடன் மனம், வாக்கு, காயம் இவைகளுடைய சுத்தியை விடாமுயற்சியுடன் காப்பாற்றிக்கொண்டு இக் கலியுகத்தில் தெய்வமே மானிடரூபமாக அமைந்துள்ளதெனக் கருதி எல்லாமதஸ்தர்களும் புகழ்ந்து வணங்கும்படி நடந்தும் வந்தார்கள்.

ஆசார்ய ஸ்தானத்தில் அவர்கள் உலகத்துக்குச் செய்துவந்த நன்மைகள் கணக்கற்றன. அவர்கள் போய்க்கொண்டிருந்த ஒவ்வொரு இடத்திலும் சிஷ்யர்களுடைய சன்மார்க்கம், தர்மாசரணை, ஞானம் இவைகளின் அபிவிருத்திக்காக ஆங்காங்குச் செய்துவந்த உபந்யாசங்கள் கேட்போர்களுடைய சந்தேகங்களைச் சடுதியிலகற்றி அவர்களுக்கு விவேகத்தையும், பக்தியையும் புகட்டி இப்படி யுக்தி பொருந்த உரைக்கும் வல்லமை எவரிடத்திலும் காணேமென எல்லோரும் வியந்து கொண்டாடும் பான்மையுள்ளனவாயிருந்தன.

அவர்கள் அத்வைத ஸித்தாந்த பரிபாலகராய் இருந்தாலும் பிறமதங்களில் துவேஷமாவது அவைகளை நிந்தித்துக்கூறும் இழுக்காவது அவர்களிடத்தில் இருந்ததில்லை.

பலமதங்களின் பரஸ்பரவித்யாசமான தாற்பரியங்களைப்பற்றிப் பலசமயங்களிற் பிரசங்கிகமாக அவர்கள் பேசும்பொழுது "அப்பிரத்தியட்சமான பரம்பொருள் மானிடர்களுடைய மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத தன்மையுடையதாகையாற் காலபேதங்களுக்கும் அறியமுயலுவோருடைய மனப்பக்குவமாகிய அதிகார பேதங்களுக்கும் தக்கபடி அந்தந்த மதாசாரியர்கள் அப் பரம்பொருளின் இலட்சணத்தையும் அதை வழிபடுவதற்கு அநுகுணமான விதிகளையும் அவ்விதிகளை அநுசரிப்பதற்கு இன்றியமையாத ஆசாரங்களையும் பற்பலவிதமாகக் கூறியிருந்தாலும் அவைகளெல்லாம் ஒரே ஊருக்குப் போவதற்கு ஏற்பட்டிருக்கும் பல மார்க்கங்கள்போல ஒரேபரம்பொருளை அறிவதற்கும், அடைவதற்கும் அமைந்த சாதனங்கள் என்றும், அவைகளொன்றுவது அவமதிக்கக்கூடியதன்றென்றும் அந்தந்த ஆசார்ய பரம்பரைக்குள் அடங்கிய சிஷ்யர்கள் அந்தந்த ஆசார்யர்கள் மொழிந்திருக்கும் முறைகளை பக்தி சிரத்தையுடன்

அநுசரித்து வரவேண்டுமென்றும் சமரசமான தாத்பரியத்தை விளக்கி எல்லாருக்கும் உபதேசம் செய்துவந்தார்கள்.

அவர்களுடன் சம்பாஷணை செய்யும்படி நேரும் ஒருவன் கிறிஸ்துவனுயிருந்தாலும் மிலேச்சனுயிருந்தாலும் எவ்வித மதப்பற்றுமில்லாத நாஸ்திகனுயிருந்தாலும் அவனும் அவருடைய உபதேச வாக்கியங்களையும் அவைகளிற் பொருந்தியிருக்கும் யுக்தி அநுபவம் முதலிய பண்புகளையும் வியந்து கொண்டாடுவனேதவிர, அவைகள் தன் மதக்கொள்கைக்கும் அபிப்பிராயத்துக்கும் புறம்பான தாத்பரியங்களை உடையவைகளென்றும் அவர்களுடைய வசனமானது தன்னுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமானதென்றும் நினைக்கமாட்டான். அவர்கள் உரைப்பதெல்லாம் சாஸ்திரமுறையாகக் கருதினுலும் அல்லது கேவலம் யுக்தி அநுபவங்களைக்கொண்டு ஆராய்ந்தாலும் எவ்வித ஆக்ஷேபணைக்குமிடமின்றி நிகரற்ற பிரமாண வசனங்களாக அங்கீகரிக்கப்படும் பான்மையுடையவைகளாயிருந்தன.

தர்மங்களை நடத்திக்காட்டும் ஆசரணையே ஆசாரியர்களுக்கு இன்றியமையாததாகையால் அவர்கள் ஒவ்வொரு க்ஷணமும் பேசுவதும், செய்வதும் தவமாகவே அமைந்து கேட்போருடையவும் பார்ப்போருடையவும் மனங்களைக் குற்றமறக்கழுவி நாமும் இவ்வண்ணம் நடப்பதே நல்ல முறையென்று எல்லோரும் நினைந்து ஆசரிக்கும்படியான (Example) நெறிகாட்டிடும் பிரமாணங்களாகவிருந்தன.

காலையில் விடிய ஜாமத்துக்கு முன் எழுந்து ஸ்நானம் செய்து தம்முடைய ஆச்ரமத்துக்குரிய நித்யகர்மம் முதலியவைகளைச்செய்து முடித்தும் விடிந்தபிறகு தம்முடைய ஆத்மார்த்தமான ஜபம், அநுசந்தானம், பூஜை முதலியவைகளையும் இயற்றியும், பின்னர் ஆசார்யரென்னுமுறையில் வருவோர்களுடைய சந்தேகங்களை நிவர்த்திக்கும் வண்ணம் சாஸ்திர முறையான சம்பாஷணை உபந்யாஸம் முதலானவைகளைச்செய்தும், பகல் 10-நாழிகையானவுடன் மாத்தியான ஸ்நானம் நித்யகர்மம் முதலியவைகளை நடத்திப்பின்னர் பூர்வாசாரியர்கள் பரம்பரையாய்ப் பூஜித்துவந்த சந்திரமௌளீசுவரர் சாரதாதேவி முதலான தெய்வங்களை விதிமுறையாகப் பூஜித்தும், அச்சமயம் வந்திருக்கும் சிஷ்யகோடிகளுக்குப் பிரசாதம், தீர்த்தப்பிரதானம் முத

லியவைகளால் அநுக்கிரகஞ்செய்தும், பின்னர் அரை நாழிகைக்குள்ளாகச் சிரமபரிகாரம்செய்துகொண்டு அப்பால் அஸ்தமிக்கும்வரையில் சாஸ்திரோபதேசம் சந்தேகநிவிர்த்தி நுட்பமான மதவிஷயங்களின் ஆராய்ச்சி இவைகளால் சிஷ்யகோடிகளுக்கு அருள்புரிந்தும், மறுபடியும் சாயரட்சைக்குரிய நித்யகார்மங்களைச்செய்து முடித்து இரவு இரண்டு நாழிகை முதல் அநேகமாக இருபது நாழிகை வரையில் பூஜை ஸ்தோத்ரம் நர்த்தனம் ஜபம் அனுசந்தானம் சாஸ்திர முறையான சம்பாஷணை இவைகளிற் காலத்தைச் செலவழித்தும், இருபது நாழிகை முதல் விடிய ஜாமம் வரையில் உட்கார்ந்தபடியே சமாதிநிஷ்டையிலிருந்து பின்னர் மறுபடியும்பிராதக்காலநித்யகர்மங்களுக்காக எழுந்தும் இவ்விதமாக ஒவ்வொருநிமிஷமும் வீணாகாதபடி முற்றிலும் தவமாகவே தம்முடைய ஜீவகால முழுமையும் அமையும்படி நடந்துவந்த புண்ணியவானை இவ்வுலகம் இனிக் கண்ணோக்குவதெப்படி?

𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

என்று பகவான்சொல்லிய சங்கற்பவசனத்தை அவர் இவர்களுடைய வடிவாயிருந்து நிறைவேற்றிவந்தாரென்று நாம் நினைக்கலாம். அவர்களிடத்திற் பொருந்தியிருந்த நித்தியாநித்யவஸ்துவிவேகம் ஒப்பற்றது. அவர்களுடைய வைராக்கியத்தை இத்தன்மையதென்று புகல்வது மரிது. சமதமாதி குணங்கள் ஓர் உருவெடுத்து வந்தனபோல் அவர்கள் பிரகாசித்து வந்தார்கள். பிரபஞ்சத்திற் பற்றில்லாதவர்களாய் "இப் பிராரத்தம் எப்பொழுது நம்மை விட்டகலும், எப்பொழுது பிர்மசாயுஜ்யத்தை நாம் அடைவோம்" என்னும் அவாவானது அவர்களிடத்திற் குன்றாது விளங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் உலகினருடைய நன்மையைக் கருதி நம்முடைய தென்னாட்டில் இருமுறை யாத்திரைசெய்து அவர்கள் தங்கிய க்ஷேத்திரங்களில் எல்லாம் ஆஸ்திகர்களின் சபைகளைக் கூட்டிவைத்து, அவர்களுக்குரிய தர்மம், ஆசரணை, வித்தை இவைகள் சம்பந்தமான உபதேசங்களையும் பற்பல உபந்யாஸங்களையும் செய்துவந்தார்கள். அவர்களுக்குப் பாதகாணிக்கையாகவும், பிக்ஷாநியமமாகவும் சிஷ்ய

கோடிகள் மனமுவந்து அளித்துவந்த திரவியங்களை பூஜை, அன்ன தானம், வித்வத்சம்பாவனை முதலிய தர்மங்களில் வினியோகித்து மடத்தின் பெருமையை எப்பொழுதும் நிலைநிறுத்தி வந்தார்கள்.

அவர்கள் ஆதி சங்கராசாரியரவர்கள் முதல் 33-வது பட்டத்தைப் பெற்றவர்கள். அவர்களுடைய ஜனனம் பிங்கள வருஷம் பங்குனி மாதம் கிருஷ்ணபக்ஷம் ஏகாதசி தினத்திலென்றும், அவர்கள் அக்ஷயவருஷத்தில் ஸன்யாஸ ஆச்ரமம் பெற்றார்களென்றும் மடத்திலுள்ள சரித்திர வரலாற்றால் வெளியாகின்றது. அவர்கள் அவதரித்தகுலமும் மிக்க மாட்சிமைபெற்றது. அவர்களைப்பெற்று உலகத்துக்களித்த புண்யவான் - கிருஷ்ணபகவானைப் பெற்றளித்த வசுதேவருக்கு நிகரான பெருமையுள்ள சதகோடிராமாசாஸ்திரிகள். அவர்களுடைய தமையனாரவர்கள் பலராமருக்குச்சமானமான கீர்த்தி பெற்ற பிர்மஸ்ரீ-லக்ஷ்மீநரஸிம்மசாஸ்திரிகள். அவர்கள் தம்முடைய பிராரப்தம் ஒழியும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டே கடைசியாகநடத்திய யாத்ரையைத் துரிதப்படுத்திக்கொண்டு அவர்கள் வெகுநாளாகக் கொண்டிருந்த சங்கற்பமாகிய காலடிக்ஷேத்ர உத்தாரணத்தை 1910-ஆம்த்திற் சிறப்பாகச்செய்து முடித்தார்கள்.

அவர்கள் அந்த க்ஷேத்ரத்தில் ஆதி சங்கராசாரியரவர்களுடைய பிம்பப் பிரதிஷ்டையும் ஸ்ரீ சாரதாதேவியின் திவ்யவிக்ரஹப் பிரதிஷ்டையும் செய்து விஸ்தாரமான ஆலயங்களையும் நிர்மாணஞ்செய்து அளவற்ற திரவிய விநியோகத்தினாற் கும்பாபிஷேக முதலிய புண்ய மஹோத்ஸவங்களையும் நடத்தி உலகத்திற்கு நிகரற்ற நன்மையைச் செய்தார்கள். இஃதன்றியும் மைசூர் சம்ஸ்தானம், பங்களூரில் சங்கரபுரமென்னும் நாமதேயத்துடன் ஒரு அக்ரஹாரத்தையும் அதில் உயர்தரமான ஸம்ஸ்கிருத வித்யையை எல்லாரும் அப்யாஸம் செய்யும்படி ஒரு வித்யாசாலையையும் 1911-ஆம்த்தில் ஸ்தாபித்து அந்த வித்யாசாலை எக்காலமும் நடைபெற்று வரும்படியான ஏற்பாட்டையும் செய்திருக்கிறார்கள்.

இக் கலியுகமானது முதிர்ந்து பிறமதங்களின் பிரவேசத்தினால் நம்முடைய பிராசீனமதக் கொள்கைகளும், ஆசரணைகளும் அலங்கோலப்பட்டு ஆர்யவம்சத்திற் பிறந்தவர்கள் பக்தி, சிரத்தை முதலிய

உயர்ந்த பண்புகள் அற்றவர்களாய்க் கேடுற்று வருவதைப்பற்றி அவர்கள் தீராவிசாரம்கொண்டு அக்கேடுகளைப் பரிகரிக்கும்வண்ணம் இன்னும் எத்தனைவிதமான நன்மைகளையோ செய்யக் கருதியிருந் தார்கள். ஐயோ! நமது தேசத்தினுடையவும் அதில்வசிக்கும் ஆரியர் களுடையவும் துர்பாக்கியமானது அவர்களை நாம் சடுதியில் இழக்கும் படி செய்தது. அவர்கள் ஸ்ரீ ராமன் ஸ்ரீ கிருஷ்ணன் முதலான அவதாரபுருஷர்களைப்போல அவர்களுடைய உயர்ந்த பதவியாகிய நிரதிசயானந்தப் பிர்ம ஸாக்ஷாத்காரத்தை அடைந்தவர்களாயினும் அவர்களைவிட்டுப் பிரிந்த நம்முடைய துர்ப்பாக்கியத்தை அளவிட்டுக் கூறமுடியாது.

அவர்கள் விதேககைவல்யத்தை அடைவதற்குமுன் தமக்குப் பின்னர் தம்முடைய ஸ்தானத்தில் இருந்து ஆசாரிய பீடத்தை வகித்து வருவதற்கு ஸ்ரீமத்-நரஸிம்ம சாஸ்திரிகள் என்று பெயருள்ள தம்முடைய சிஷ்யரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தவண்ணம் மைசூர் இராசாங்கத்தாருடையவும், மற்றப் பண்டிதர்களுடையவும் ஆமோதனத்தின்பேரில் அந்த ஸ்ரீமத்-நரஸிம்மசாஸ்திரிகளவர்கள் ஸன்யாஸம்பெற்று நாளது ஏப்பிரல்மாதம் 7-ம் தேதி பானுவார தினத்தில் மடாதிபதியாகி விளங்கிவருகிறார்கள். அவர்களுக்கு இப் பொழுது 18-வயதென்றும் அவர்கள் இப்பொழுது விதேக கைவல்ய மடைந்த ஆசார்யரவர்களுக்குள் முக்கிய சிஷ்யராய் அவர்களிடத்தில் வித்யாப்பியாசம் செய்து பூர்வ மீமாம்சை, வேதாந்தம் முதலிய உயர்ந்த சாஸ்திரங்களில் அற்புதமான தேர்ச்சியடைந்தவர்களென வெளியாகின்றது.

அவர்களும் ஆதி சங்கராசார்யர்களுடைய கருணையினாலும் இப்பொழுது விதேக கைவல்யமடைந்த ஆசார்யரவர்களுடைய அநுக் கிரகத்தினாலும் 34-வது பட்டமாகிய இந்த ஆசார்ய ஸ்தானத்தை நெடுங்காலம்வகித்து நம்மையும் நம்முடைய ஆர்யமத சித்தாந்தங்களை யும் அன்புடன் காப்பாற்றிச் சிருங்ககிரிமடத்தின் பெருமைகுன்றாது வாழ்வித்து வருவார்களென்பதிற் சற்றேனும் ஐயமில்லை. அவ் வண்ணமே நம்முடைய பிரார்த்தனை நிறைவேறும்படி பரமகருணா நிதிகளாகிய சந்திரமௌளீசுவரரும் சாரதாதேவியும் அருள்புரி வார்களாக!

இப்பொழுது பிர்மகைவல்யமடைந்த ஜகத்குரு ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்மபாரதீ யோகீந்த்ரரவர்கள் தம்முடைய பௌவுதிகசரீரத்தை ஒழித்துவிட்டு திவ்யதேகத்துடன் உத்கிருஷ்டபதமானகைலாஸத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் நம்முடைய க்ஷேமத்தைப்பற்றி அவர்கள் கொண்டிருந்த அவாவானது அவர்களுடைய அந்தக்கரணத்தை விட்டு எப்பொழுதுமகலாது. அவர்கள் நம்மை மேன்மேலும் வாழ்விக்க எண்ணமுள்ளவர்களாய் அவர்களுடைய அநுக்கிரகத்தைச் செலுத்தி நாம் அக்ஞானத்திலிருந்து தலையெடுக்குமாறு கருணைபாராட்டி வருவாராக. அவர்களுடைய பெருமை இத்தன்மையதென்று புகலுவது அசாத்தியமாயினும் அதை ஒருவாறு அடியிற் கண்ட சுலோகங்களால் வியந்து கொண்டாடுகின்றோம்.

1. ஸ்வர்தே³வப்ரணாமைர்விஜித வைத³க்³த்⁴யநிலய:
த³யாவாராவார: [illegible]
[illegible] ஸஞ்ஜீவநவிதௌ⁴
[illegible] ॥

2 [illegible]
நரஸிம்ஹநாமாங்கித ஸம்யமீந்த்³ர:
விஹாய தே³ஹம் [illegible]
ஶ்ரியம் வித⁴த்தே [illegible] ॥

3. [illegible] நிகி²லாசார்ய ப³ஹுமத:
[illegible]
[illegible]
[illegible] நரஹரியதீந்த்³ரோ விஜயதே ॥

P. S. சுப்பிரமணிய ஐயர்,
பிரஸிடெண்டு,
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

பாரத ரகசியம்.

(கஙக-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

அஸ்தினபுரியானது குருக்ஷேத்திரத்தில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. "குருக்ஷேத்திரம்" என்னும் பதம் குரு+க்ஷேத்திரம் என்னும் இரண்டு சொற்களால் அமைந்தது. "குரு" என்னும் சொல் செய்தல் என்னும் அர்த்தமுடைய "க்ரு" என்னும் தாதுவிலிருந்து உண்டானது. முழுப்பதத்திற்கும் தர்மம் அல்லது கர்மத்தைச் செய்யும் நிலையென்று பொருளாகும். பகவத்கீதையில் "𑌧𑌰𑍍𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌕𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇" என்று குருக்ஷேத்திரத்திற்கு விசேஷணம் சொல்லப்பட்டிருப்பதைக் காண்க. இந்த ஸ்தூலதேகத்தைத் தர்மஸாதனம் என்றும், எல்லாத் தர்மங்களும் இந்த ஸ்தூலதேகத்தைக்கொண்டே அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்றும், சூக்ஷ்மதேகத்திற்காவது காரண தேகத்திற்காவது கர்மாதிகாரம் கிடையாதென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆகவே பாரதம் என்னும் சரித்திரமானது ரகஸ்யமாக ஜீவாத்மா ஸ்தூலதேக அபிமானியாய் அந்த ஸ்தூலதேகத்தைக் கொண்டு எல்லாத் தர்மங்களையும் அனுஷ்டித்து அப்படி அனுஷ்டிப்பதற்கு ஜீவாத்மா அந்தக்கரண ரூபனாகவும் பஞ்சேந்திரியங்களுடைய விருத்திகளை யுடையவனாகவும் இருந்து கர்மம்செய்யும் நிலைமையில் (sphere of action) தனக்குவிரோதிகளான காமக்ரோதம் முதலிய கணக்கற்ற (உபலக்ஷணமாக நூறு) மலினதத்துவங்களுடன் போராடி அவைகளை ஜெயித்துக் கிருத கிருத்தியனாக ஆகிறானென்பதையும், அந்த அந்தக்கரணனாகிய ஜீவாத்மாவுக்குப் "புத்தி" என்னும் தத்துவமானது இடைவிடாது உதவிபுரிந்து வருமென்பதையும் விளக்கிக் காண்பிக்கின்றது.

கௌரவர்களுடையவும் பாண்டவர்களுடையவும் கூடஸ்தன் "சந்தனு" என்ற பேருடைய அரசன். அந்தப்பேரானது கூடஸ்தனை சுத்த சைதன்யத்தை குறிக்கின்றது. அப்பெயருக்கு க்ஷேமத்

தையே தேகம் அல்லது சொரூபமாக உடையவனென்பதுபொருள். அந்தக்கூடஸ்த சைதன்யமே விஷயத்திற்பற்றுமை விஷயத்திற் பற்றுதல் என்னும் இருவிதப் பண்புகளையும் உடையது. அதாவது அந்தக்கூடஸ்த சைதன்யத்தினிடமிருந்து அந்த இரண்டுபண்புகளும் உண்டாகின்றன என்பதை விளக்கிச் சந்தனுவுக்கு இரண்டு குமாரர்கள் என்றும், அவர்களில் ஒருவன் பிரமசாரியான பீஷ்மன் என்றும், மற்றொருவன் தாழ்ந்தகுடியிற் பிறந்தவளாகிய மச்சகந்தியின் குமாரனும் விஷயபத்தனுமான விசித்திரவீர்யனென்றும் சொல்லப்படுகின்றது. மச்சகந்தி யென்னும் நாமமானது மச்ச+கந்தி என்னும் இரண்டு சொற்களால் அமைந்தது; மச்சம் என்னும் சொல்லானது "ஜூ" என்னும் தாதுவிலிருந்து உண்டானது. அந்தத் தாதுவுக்குத் "தன்னைமறத்தல்" என்பது பொருளாகும். ஆதலால் பீஷ்மன் என்னும் நாமம் விஷயத்துக்குள்ளாகாத தன்மையையும், விசித்திர வீரியன் என்னும் நாமம் அஞ்ஞானத்தினல் உண்டாகிற பிரமை (அல்லது மறதி) யிலிருந்து உத்பத்தியாகும் ஓயாத பிறப்பென்னும் சம்சார நிலையையும் குறிக்கின்றன.

விசித்திர+வீரிய என்னும் இரண்டு சொற்களின் சேர்க்கையினல் ஏற்பட்ட விசித்திரவீரியன் என்னும் நாமம் பற்பலவிதமாகப் பரிணமிக்கின்ற சக்தியென்ற பொருளுடையதாகும். சாதாரணமாக வழக்கத்திற் பிரஜைகளை உண்டுபண்ணுவதற்கு அநுகுணமானவிதை அல்லது தேஜஸுக்கு வீர்யமென்று நாமமுரைப்பதைக்காண்க. அந்த வீர்யமானது பிரஜைகளை யுற்பத்திபண்ணுகிற எல்லாப்பிராணிகளுக்கும் பொதுவாயிருப்பினும் அந்த வீரியத்திற்கு ஈசுவரனுடையசாயை அல்லது பிரகாசமானது சம்பந்தப்பட்டால்தான் அவனுடைய ஏகதேச அம்சபூதமாகிய மானுடஜன்மம் கிடைக்குமாதலால் விசித்திர வீரியனுடைய மனைவிகளைக்கலந்து வேதவியாசர் புத்திரர்களை உண்டுபண்ணினர் என்னும் கதையேற்பட்டுள்ளது. விசித்திர வீரியனுடைய இரண்டுமனைவிகளும், அவர்களுடையதாசியும் முறையே தமோகுணம், ஸாத்விககுணம், ரஜோகுணம் இம்மூன்றையும் குறிக்கின்றனர்கள். தமோகுணத்திலிருந்து அந்தக்காரணமான அஞ்ஞானம் உண்டாயிற்று என்பதை அந்தகனன திருதராஷ்டிரன் என்னும் நாமமும்,

ஸாத்துவிக குணத்திலிருந்து கர்மத்துக்கு அவசியமான நல்லறிவுண்டாயிற்றென்பதைப் பாண்டுவென்னும் நாமமும், ரஜோகுணத்திலிருந்து சாமர்த்தியம் என்னும் பண்பு உண்டாயிற்றென்பதை விதுரனென்னும் நாமமும் விளக்குகின்றன.

பிரமையினால் தேகத்தையும், விஷயங்களையும் அபிமானித்து அவைகளைச் சுமந்துகொண்டு திரிகின்ற காரணத்தினால் அக்ஞானத்திற்குத் திருதராஷ்டிரனென்னும் பெயர் கொடுக்கப்பட்டது. திருதராஷ்டிரனென்னும் பெயருக்குச் சீமை அல்லது நாட்டை அபிமானித்துச் சுமக்கிறவன் என்று பொருள். பாண்டு என்னும் பதத்திற்கு வெளுத்த (அல்லது சுத்தமான) என்பது பொருளாகும். சாத்துவிக குணத்தினுடையவும், அதிலிருந்து உற்பத்தியாகுமறிவினுடையவும் தன்மையானது சுத்தமுள்ளதாகையால் அதை ஸங்கேதமாக விளக்கிப் பாண்டுவென்கிற பெயருரைக்கப்படுகிறது. ரஜோகுணம் அன்பு என்று பொருள்படுகிற ரஞ்ச் என்னுந் தாதுவிலிருந்து உண்டாகி எல்லோரிடத்திலும் அன்பு பொருந்தி நடக்கும் ஸாமர்த்தியத்தை யுண்டுபண்ணுகிறதாகையால் ஸாமர்த்தியவான் என்று பொருள்படுகிற விதுரன் என்னும் நாமம் அந்த ஸாமர்த்தியத்தைக் குறிக்கின்றது. அன்பின் மிகுதியால் எல்லோரிடத்திலும் நீதியுடன் அன்புசெலுத்தும் தர்மராஜனே விதுரனாக அவதரித்தானென்று மொழிவதைக்காண்க. அந்தத் தர்மராஜனுக்கு ஸமவர்த்தி என்கிற பிரதிநாமம் உண்டு. அந்த நாமத்துக்கு எல்லாரிடத்தும் ஒரேவிதமாக இருப்பவனென்பது பொருளாகும். அப்படியே விதுரனும் பாண்டவர் கட்சியிலாவது கௌரவர் கட்சியிலாவது சேராமல் இங்கிலீஷில் Neutral என்று அர்த்தமாகிறபடி அவனுடைய பெயருக்கிணங்க ஸாமர்த்தியமாக இரு கட்சிகளுக்கும் வேண்டியவனாக இருந்தானென்கிற கதையின் பொருத்தத்தையுமாராயவேண்டும்.

வேதவியாசர் என்னும் நாமம் வேத+வியாச என்னுமிரண்டு சொற்களாலமைந்து அறிவை ஒழுங்காக வரிசைப்படுத்தி வைத்தல் என்னும் பொருளையுடையது. ஜீவாத்துமா விலங்கின் பிறப்புக்குள்ளாயிருக்கும்போது உண்ணல், உறங்கல், பயப்படுதல், உத்பத்தி

செய்தல் என்னும் நான்குவித விருத்திகளையுடையனவாயிருந்தன. அந்த ஜீவாத்துமா பரமேசுவரனுடைய சாயையை அடைந்து மானிடப்பிறவியில் ஏறியவுடன் Morality என்று சொல்லப்படும் தர்மத்தின் நினைவை முதலாவது அடைகின்றது. அதனால் மானிடர்களிடத்தில் விலங்கினமாயிருந்த பூர்வவாசனையினால் வந்த இச்சை (அல்லது ருசி) என்னும் இழிய பண்பும், பரித்தியாகம் அல்லது தர்மம் என்னும் உயர்ந்த பண்பும் கலந்து நிற்கின்றன. அறிவினாலும் புண்ணிய ஸம்ஸ்காரங்களினாலும் தர்மம் மேலாக மேலாக ருசி குறைந்துகொண்டே வந்து கடைசியில் தர்மமொன்றே மிகுந்து கிருதகிருத்தியர்கள் ஆகின்றார்கள். அம்முறையாக மானிடஜன்மத்திற் பரமேசுவரனுடைய சாயை பொருந்துவதைச் சங்கேதமாக விளக்கி விசித்திர வீரியனுடைய மனைவிகளிடத்தில் பகவத்சொரூபியான வேதவியாசர் சம்பந்தப்பட்டார் என்னும் கதையானது நடைபெற்றிருக்கின்றது. இம்முறையாக மானிடர்கள் ஈசுவரச்சாயையினால் தர்மமென்னுமுயர்ந்த பண்பையடைந்தபோதிலும் அவர்களிடத்தில் ருசியும் பொருந்திநின்று அவர்களை விஷய பத்தர்களாக்குகின்றது. அவர்களிடத்தில் முக்குணங்களின் காரியங்களான பிரமை அல்லது அக்ஞானம், (திருதராஷ்டிரன்) அறிவு, (பாண்டு) அன்பு செலுத்தும் ஸாமர்த்தியம் (விதுரன்) இம்மூன்று பண்புகளும் கலந்து நிற்கின்றன.

திருதராஷ்டிரனுடைய மனைவி காந்தாரியென்றும், பாண்டுவினுடைய மனைவிகள் குந்தீ, மாத்ரீ யென்றும் சொல்லப்படுகின்றனர். கந்தாலி என்றால் வாசனையிலுள்ள புழு. ர வுக்கும் ல வுக்கும் வடமொழியிற் பேதமில்லாததுபற்றி அப்பதம் கந்தாரி என்று வழங்கலாகும். அதன் சம்பந்தத்தையுடையவள் காந்தாரி. திருதராஷ்டிரன் என்னும் நாமம் கந்தத்தையே குணமாகவுடைய மண் வடிவமான ஸ்தூலதேக அபிமானத்தைக் குறிக்கிறதாகையால் காந்தாரி யென்னும் நாமம் அந்தத் தேகத்தின் இயற்கையாகிய மண்ணின் குணமான கந்தத்தின் ஈனமான தன்மையைக் குறிக்கின்றது. அந்த ஸ்தூலதேக அபிமானத்திலிருந்து உத்பத்தியான காமக்குரோதாதிகளின் எண்ணிறந்த பேதங்களைத் துர்யோதனாதிகள் குறிக்கின்றார்கள்.

அவர்களிற் காமத்தினுல் ஏவப்பட்டு அக்கிரமமான சண்டையைச் செய்பவன் துரியோதனன். அந்த நாமத்துக்கு அவ்விதமே பொருளாகும். குரோதமானது அக்கிரமமாகப் பிறர்களை வருத்தும்படி சாசனம் செய்கின்றது. அதுபற்றி அந்தச் சாசனமானது துன்மார்க்கமுடையதாகும். துச்சாசனன் என்னும் நாமம் குரோத விருத்தியையே குறிக்கின்றது. இம்முறையாகத் திருதராஷ்டிரனுடைய குமாரர்கள் நூறுபேர்களுடைய பெயர்களையும் தனித்தனி பிரித்துப் பதப்பொருளை யாராயின் அப்பெயர் ஒவ்வொன்றும் காமக்குரோதாதிகளுடைய பலபேதங்களில் ஒன்றைக்குறிப்பதாகும்.

இனிப் பாண்டுவென்னும் நாமம் அறிவைக்குறிப்பதால் அந்த அறிவு விருத்திஞானமாகப் பரிணமிப்பதற்கு இந்திரியங்களின் மூலமாக ஈட்டிபோலப் பாய்கின்றது. குந்தமென்ருல் ஈட்டி அல்லது கூர்மையான ஆயுதமென்று பொருளாகும். குந்தி யென்னும் நாமம் குந்தமென்னும் பதத்திலிருந்துண்டான பெண்பாற் சொல். அது அறிவானது இந்திரியங்களை ஊடுருவிச் செல்லுந்தன்மையைக் குறிக்கின்றது. மாத்ரீ யென்னும் நாமம் மத்ர என்னும் சொல்லிலிருந்துண்டானது. அந்தச்சொற்குச் சுகப்படுதல் சந்தோஷப்படுதல் என்பது பொருள். சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என ஐந்து விருத்திகள் இந்திரியங்களுக்கு உள்ளனவாகவிருப்பதில் உபலப்தி அல்லது 'இது' 'அது' வென்னும் ஞானத்திற்குச் சப்தம், ஸ்பரிசம், ரூபம் இம்மூன்றையும் உண்டுபண்ணுவதற்கு அறிவானது இந்திரியங்களை யூடுருவிச்செல்லுங்கதியைக் குந்தீ என்னும் பெயரினுலும், சுகம் அல்லது சந்தோஷத்தையுண்டுபண்ணுகிற ரசம், கந்தம் இவைகளைத் தெரிவிப்பதற்காக அறிவானது இந்திரியங்களை யூடுருவிச் செல்லுங்கதியை மாத்ரீயென்னும் பெயரினுலும் குறிக்கப்படுகின்றது.

ஒரு மானிடன் பிறந்த கணமே சிசுவாயிருக்கும்பொழுது அவனுக்கு ஒன்றின்பின்னென்ருக ஆறுவிருத்திகள் இயற்கையாய் உண்டாகின்றன. அவைகளாவன:- முதலிற் பசியும், தாகமும், பின்னர் சப்தஞானம், பிறகு ஸ்பரிசஞானம், பிறகு ரூபக்ஞானம், பிறகு ரசக்ஞான்ம், பிறகு கந்தம் அல்லது வாசனையின் ஞானம் உண்டாவதாகும்.

250

குந்தியினுடைய முதலாவது குமாரன் கர்ணன். அவனுக்கு வைகர்த்தனன் என்னும் நாமம் முதலாவதிடப்பட்டது. அவன் சூரியனிடமிருந்து உத்பத்தியானவன் அவனைக் குந்தி விபரந்தெரியாத சிறு பெண்ணாயிருக்கும்பொழுதே பெற்றாளென்பது கதையாகும். அதாவது ஒரு குழந்தை பிறந்தவுடன் அதற்குத் தன்னறிவு வரு முன்னமே சூரியனுடைய சக்தி விசேஷமான ஜாடராக்கினியிலிருந்து பசியும் தாகமும் உண்டாகின்றன. அந்தச் சூரியனுக்கு விகர்த்தனன் என்றுபெயர். அப்பெயருக்கு அழிக்கிறவன் என்பது பொருளாகும். அவனிடமிருந்து உண்டான கர்ணனுக்கு வைகர்த்தனன் என்று பெயர். அப்பெயருக்கு அழிக்குஞ் சக்தியிலிருந்து உண்டானவன் என்பது பொருள். உலகத்தில் எல்லாப் பதார்த்தங்களும் உண்டு அழிக்கப்படுவனவாகையால் ஜாடராக்கினியானது விகர்த்தனன் என்று சொல்லப்படுகிறது.

தஸ்யைதஸ்யைஷா நஶ்ரீ: விஶ்வாவிகர்விஶ்வசேதா உர்வ:, ஸோ ஹ்ருஷீக்ஷ்வஹர்ஜநுதிஷ்டு நு ஸூர்யாஸம் ஸுஜாஸ்ஸவி:। ஸஞ்ஞாவயதிஸ்வம் ஜெஹம் ஸூவாத்ஷதமௌத்ஸுகமென்று அந்த அக்னியை(சூரியனை)வேதமானது விவரித்துக் கூறுவதை ஆராய்க. கர்ணன் என்னும் பெயருக்கு ஒரு கப்பலை நடத்துகிற கப்பலின் காதாகிய துடுப்பு என்று பொருள். கப்பலை நடத்துவதற்குத் துடுப்பானது இன்றியமையாத ஸாதனமாக இருப்பதுபோலப் பசியுந் தாகமும் சரீரத்தை உயிர்ப்பித்து நடத்துதற்கு முக்கிய ஸாதனமாக இருப்பதாலும் அவை ஒழியின் சரீரம் உடனே அழிந்து போகக்கூடியதாய் இருப்பதாலும் பசியையுந் தாகத்தையுங் கப்பலின் காது அல்லது துடுப்புக்கு உவமைகூறிக் கர்ணன் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜன்மத்தைச் சமுத்திரமாகவும், சரீரத்தைக்கப்பலாகவும், உடலுடன் உயிர் பொருந்தி நிற்பதை யாத்திரையாகவும் உவமை சொல்லி ஜீவகாலத்தைத் தேகயாத்திரையென்று சங்கேதமாகப் புகல்வதைக்காணலாம். பசியும், தாகமும் சின்மயமான அறிவின் சம்பந்தமன்றி முழுமையும் ஜடாத்மகமாயிருப்பதால் அவைகள் பரிசுத்தமற்றனவென்று கருதிக் காமக்குரோதாதிகளுடன் அவைகளைச் சேர்த்து விடவேண்டியதென்பதை விளக்கிக் கர்ணனைக் குந்தி இளம்பருவத்

திலேயே அகற்றிவிட்டதாகவும், அவனை இழியதொழிலுள்ள சூதன் புத்திரனுகக்கொண்டு வளர்த்ததாகவும் அவன் பின்னர் மலினதத்துவங்களைக் குறிக்கின்ற துரியோதனுதிகளுடன் ஒன்றுசேர்ந்து வாழ்ந்ததாகவும் கதையின் வரலாறு கூறப்பட்டுள்ளது.

பஞ்சபாண்டவர்கள் பஞ்சேந்திரியங்களைக் குறிக்கின்றார்கள். அவர்களில் தர்மன் என்னும் பதம் சப்தத்தைக் குறிக்கின்றது. தர்மமென்னும் சொல் எல்லாவற்றையும் தரிக்கிறது அல்லது தாங்குகிறது என்று பொருள்படுகிற "ധൃ" என்னுந் தாது விலிருந்துண்டான சொல்.

(தொடரும்.)

P. S. சுப்பிரமணிய ஐயர்,
பிரஸிடெண்டு,
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

உ

மாட்சிமைதங்கிய இந்தியச் சக்கிரவர்த்தியாகிய

மேரி மஹாராணி ஜியார்ஜ் V. மஹாராஜா சக்கிரவர்த்தியவர்களின் முடிசூட்டுக்கொண்டாட்ட

வாழ்த்து.*

திணை - பாடாண்டிணை. துறை - வாழ்த்தியல்.

நேரிசையாசிரியப்பா.

முழங்கு முந்நீர் முதுநிலை வளைஇய
நீள்வளத் துலகு தாளிற் றருகுநர்
தத்தம், புலமுறு கோட்பா டுலைதரற் கேற்ப
இணங்கியும் பிணங்கியு மிருந்தனரால் அப்
ரு. புரவல ரறிவு திரிவு படாஅ
தொழுகுற நட்பின் கிழமை பெருகித்
திகழு மாறே யகனிலங் காத்த
இசைமேந் தோன்றல்! எந்தலேறே!
வசையொடு படாத மன்னவர் முன்ன!
க0. சாயா தெஞ்ஞான்று மன்புசெய் தாயினும்

* சிதம்பரம் டிவிஷன் கலெக்டர் ஸ்ரீமாங். இராகவாசாரியாரவர்கள் அக்கிராசனம் வகிப்ப "இராஜபக்தி" யைப்பற்றி உபந்யசித்து வெளியிடப்பட்டது.

ஏரியல் பழுத்த மேரித் தலைவி
வாழ்க்கைத் துணையே! வருமுறை கோடா
நடுநிலைச் செங்கோல் நடவிய பெரும!
வாழியர் நின்பாற் சூழுமா ராணி
நிலந்தரு திருவின் நீயும் வாழியர்
நாளும் நாளும் ஆள்வினை மிகுப்ப
இந்தியர்க் கொருபதி யென்றிசை பராவ
மாண்பினர் சூழுஉவிற் பூணுந் திருமுடி
நனிசிறந் திடுக நனிசிறந் திடுக
உரிமை யாளரும் வருசூழ்ச்சித் துணைவரும்
வழிவழிக் கேளிருங் கெழுமிச் சிறக்க
காட்சியில் வழியே காண்பெறு தறிவுமற்
றஃதில் வழியே யரும்பா தன்புமன்
என்றவி னெங்க ளேமை முன்னர்
அரும்பெறற் காட்சிசெய் தறிகுறை யதனால்
முறைமுறை வளரும் பிறையே யென்னச்
செழுமயி னிகவா தெழுபே ரன்புப்
பரிசிலொன்றே பேறுபெறத் தரூஉம்
நந்தாச் சீர்த்தி ஐந்தாவது ஜார்ஜ்
என்றுபுகழ் எங்கணும் எழுதும்
நின்னரசு வாழி வாழி நீணிலத்தே.

பார்வதிப்பேர் முழுமுதல்வி பரமனிடம் பிரியாமற் பயின்றுகொண்டெங், கார்வதியும் பவமோட்டிக் கதித்தருளச் செய்கின்றாள் கண்ணே யென்னப், பேர்வதியும் மேரியெனு முழுமுதல்வி ஜியார்ஜினிடம் பிரியாதென்றும், நார்வதிய நமையோம்பி நலந்தருவா ளென்பதுநா முகமனன்றே.

முந்தாரு மதிமரபி னேரைவர் டில்லியின்மா முடிபுனைந்து, நந்தாத நிலம்புரவு பூண்டளித்தார் இஞ்ஞான்று நலமேவாய்ந்து, சிந்தாத பேருவகை யருளவவ ரோருருவிற் சேர்ந்தாலென்ன, ஐந்தாவ தாகிய ஜார்ஜெனுமகிபன் முடிபுனைமாண் பறைதற்பாற்றே. வாழி.

இங்ஙனம்,

சிதம்பரம்
ஆறுமுகநாவலர் சபை.
1911ஆ டிசம்பர்மீ
11உ

ஸ்ரீ சபாநாயகர் காலைசந்திக்கட்டளை,
V. தில்லைநாயக முதலியார்,
சிதம்பரம்.

புத்தக வரவு.

கல்யாணி:—இது ஸ்ரீமத்-ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் பீ ஏ. பீ எல். அவர்களாலியற்றப்பெற்ற தமிழ் நாவல்களுள் ஒன்று. இது வித்யாபாநுப் பத்திரிகையில் முன்னமே வெளிவந்திருப்பதாற் சிறந்ததென்பதை யெல்லோரும் தெரிந்திருப்பார்களென்றெண்ணுகிறேன். உலகவாழ்க்கையிற் றுன்பமுறுவதியல்பென்பது குறித்துப்பல நிகழ்ச்சிகளினியல்பை யுள்ளபடியே காட்டி எளிய தமிழ் நடையிலெழுதி முடிக்கப்பெற்றிருக்கிறது. ஐயரவர்கள் இதுபோலும் இன்னும் அக்ஞாதவாசம், மாலினீமாதவம், வசந்தமாளிகை முதலிய தமிழ் நாவல்களுமெழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இத்தகைய புத்தகங்கள் இக்காலத்தவர்க்கு மிகப் பயன்படுவதுபற்றி ஐயரவர்கள் செய்துவரும் நன்முயற்சி வரவர வளர்ந்தோங்கித் தமிழ் மக்களுக்கு மகிழ்வூட்டத்தக்கதென மதிக்கின்றேன். இதன் விலை அணு 10. வேண்டுபவர்கள் மகா-௱-௱-ஸ்ரீ ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயரவர்கள் பீ ஏ. பீ எல். வக்கீல், தானப்பமுதலியக்கிரகாரம், மதுரை. என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீமத் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரத்திருப்பதிகங்கள்:— இவை காஞ்சீபுரம் மஹாவித்துவான் ஸ்ரீமத்-இராமானந்தயோகிகள் எழுதியவுரையுடன் 1910ஹு டிசம்பர்மீ முதல் மாதம் ஒன்றுக்கு டிம்மி 4-பாரங்கொண்ட சஞ்சிகையொன்றாக வெளிவருகின்றன. இவற்றில் 8-முதல் 14-வரையிலுள்ள சஞ்சிகைகளைக்கண்ணுற்றேன். கனம் யோகிகளவர்கள் சிறுவரும் எளிதிலறிந்துகொள்ளுமாறு பதிகங்களைப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரைகளால் நன்கு விளக்கியிருக்கின்றனர். மிக்க அருமை பெருமை வாய்ந்த தேவாரத் திருப்பதிகங்கட்கு உரையிட்டும் பதிப்பித்தும் உலகத்திற் குதவிவருகிற யோகிகளுக்கும், ஸ்ரீமத்-பு. ஷண்முகமுதலியாரவர்கட்கும் ஈசன்திருவருளைப்பாலிப்பாராக. சஞ்சிகையொன்றுக்கு விலை அணு 2. வேண்டுவோர் பு. ஷண்முகமுதலியார், நிம்பர். 5. ஆறுமுகம் தெருவு, ஜார்ஜ் டவுன், சென்னை. என்ற விலாசத்திற் கெழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

நளச்சக்கிரவர்த்தி:—இது முதலெழுவள்ளல்களிலொருவனாகிய நளச்சக்கிரவர்த்தியின் சரித்திரத்தைக்கூறுஞ் சிறந்த தமிழ் நாடகம். இது தஞ்சை "செயின்ட்பீட்டர்ஸ் ஐஸ்கூல் தமிழ்ச்சங்க"த்து மாணவர்கள் கேட்க மேற்படி ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் வையை. ஶ்ரீமத்-ஆர். சுப்பிரமணிய ஐயரவர்களாற் சுருக்கமாக இடையிடையே யினிய செய்யுட்களையும், கீர்த்தனங்களையும் சேர்த்துத் தெய்வபக்தி, இராஜதர்மம், பெண்கல்வி, கைத்தொழில் முதலியவற்றை விளக்கி யினிய வசனநடையிலெழுதப்பட்டுள்ளது. அரங்கில் நடிப்பவர்க்கு மிகவும் உபயோகமானது. இதன் விலை அணா-4. வேண்டுவோர் இதன் ஆசிரியரிடம் பெறலாம்.

பா—ர்.

Hair Troubles Avoided

By continually using such a preparation as

KUNTAL-KAUMADI

THE NATIONAL HAIR OIL.

PRICE
12 AS.
PER BOTTLE.

You keep the scalp moist and cool. The roots of the Hair are supplied with energy and nourishment and the hair maintained in the best possible condition.

Price per Big Phial As. 12 only. Per V.P.P. Rs. 1-3.
" " 3 Rs. 2. only. " " Rs. 2-11.

TRY IT TO-DAY,

Sole Agents to Madras Presidency,

M. Shaw Heerdayal & Co.,
144-5. China Bazaar Road,
Madras.

KAVIRAJ R. C. SEN L. M. S.
216, Cornwallis Street, Calcutta.

உ

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

1912ஸு ஜனவரிமீ 1வ முதல் 31வ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

வரவு	தொகை ரூ.	அ.	ப.	செலவு	தொகை ரூ.	அ.	ப.
விரோதிகிருதுஸு மார்கழி, தைமீங்களுக்கு காஞகொத்தான் மகா-ா-ா-ஸ்ரீ சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களிடமிருந்து மாதச்சந்தா வரவு ரூ.	100	0	0	1911ஸு டிசம்பர் மீத்துக்குச் சங்கச்சிப்பந்திகளுக்கு சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ரூ.	394	8	8
செந்தமிழ்ச்சந்தா வரவு ...	186	8	0	பைண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிச் செலவு 0-3-9			
				ஷை ஆபீசு ரயில்வேசார்ஜ் 0—4—0			
பிரிண்டிங் ஆபீசு அச்சுக்கூலி வரவு 167-10-6				ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச்செலவு 52-7-8			
சங்கம் ஆபீசு சம்பந்தமான அச்சுக்கூலி வரவு 6—1—0				ஆக மேற்காட்டிய விவரப்படி பைண்டிங் ஆபீசுச்செலவு ...	52	15	5
ஆக பிரிண்டிங் ஆபீசு வரவு ...	173	11	6	பிரிண்டிங் ஆபீசு ஸ்டேஷனரிசெலவு 58-15-6			
				ஷை ஆபீஸ் ரயில்வே சார்ஜ் 2—4—0			
பைண்டிங் ஆபீசு வரவு ... 15—8—0				ஷை ஆபீசு ஆயில் எஞ்சின் சம்பந்தமாய் எண்ணெய்ச் செலவு 13—10—5			
சங்கம் ஆபீசு சம்பந்தமான பைண்டிங் வரவு 12—2—0				ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச்செலவு 13—9—3			
ஆக பைண்டிங் ஆபீசு வரவு ...	27	10	0	ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	88	7	2

256

புத்தக விற்பனை வரவு ...	93	3	6
பாலையம்பட்டி ஜமீந்தார் P. K. இராமச்சந்திரத்தேவரவர்களிடமிருந்து லைப் மெம்பர்ஷிப்புக்காக கட்டணம் வரவு 100—0—0			
சங்கம் காலி நிலம் மாக்கடைவாடகை நாளது விரோதிகிருதுவூ கார்த்திகை மீ த்துக்கு வரவு ... ... 35—0—0			
சென்னை ஹைகோர்ட்டு வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ S. ஸ்ரீநிவாசய்யங்காரவர்களிடமிருந்து லைப் மெம்பர்ஷிப்புக்காக கட்டணம் வரவு ரூ ... ... 100—0—0			
சேலம், திருச்சிசெண்டர்களுக்கு தனித்தமிழ் பரீக்ஷைக்காக அனுப்பிய தொகையில்மீதம் வாப்ஸ் வரவு ... ... 1—3—0			
சங்கம் கலாசாலை White wash செய்த தொகை, சொந்தக்காரரிடமிருந்து வாப்ஸ் வரவு ... ... 3—0—0			
ஆக மேற்காட்டிய விவரப்படி வரவு ...	239	3	0

போஸ்டேஜ் வகையிற் செலவு 11—0—0			
தந்திச்செலவு 0—13—6			
ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	11	3	6
ரிபேர் வகையிற்செலவு ...	0	14	9
சங்கம் ஆபீசு கட்டடத்துக்கு 1911 ஏப்ரல்மீ முதல் 1911 செப்டம்பர் முடிய அரை வருஷத்துக்கு முனிசிபல் வரி செலுத்திய ரூ ... . 43—12—0			
கலாசாலைக்கட்டடத்துக்கு 1911 ஜுன் முதல் டிசம்பர் முடிய மீ 7-க்கு வாடகை செல்லாக்கியது ... ... 126—0—0			
பிரிண்டிங் ஆபீசு தொழில்வரி 1911 ஏப்ரல்மீ முதல் 1912 மார்ச்சுமுடிய 1-வருஷத்துக்கு செல்லாக்கியது ... 12—0—0			
ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	181	12	0
வைஜயந்தி பிரஸ்ஸுக்கு அபிதானசிந்தாமணி வேலைக்காக அனுப்பிய ரூ 50—0—0			
ஆபீசு வாட்டர் பைப் விஷயமாய் செலவு 2-6-0			
ஆபீசு உபயோகத்துக்கு பவர்லைட் வாங்கியது ... ... 4—4—0			
வண்டி வாடகை வகையருச் செலவு 1—0—0			
கலாசாலை அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்டர் 0-1-0			
தனித்தமிழ்ப்பரீக்ஷை விஷயமாய்ச் செலவு ... ... 12—10—1			
ரெஜிஸ்டர், மணியார்டர் கமிஷன் ரசீது லேபிள்செலவு ... 2—11—0			

				பிரிண்டிங் ஆபீசு பில்ப்படி சங்கம் ஆபீசு அச்சுக்கூலி வகைக்குச்செல் 6—1—0 ஷை ஆபீசு பில்ப்படி ஷை ஆபீசு பைண்டிங்கூலிக்குச்செல் 12—2—0			
				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	91	3	1
ஆக மொத்தம் வரவு ..	820	4	0				
சென்றடிசம்பர் மீ" த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ...	47	3	0	ஆகமொத்தம் செலவு ரூ	821	10	7
ஆக மொத்தம் ...	867	7	0	போக பாக்கியிருப்பு ...	45	12	5
				ஆக மொத்தம் ...	867	7	0
ஆ மொத்தம் ...	867	7	0	ஆக மொத்தம் ...	867	7	0

திரு. நாராயணையங்கார்,
முன் மானேஜர்.
27—3—12.

T. A. Subbuvenkatarama Iyer,
Manager.
27—3—12.

Audited and found Correct
S. GOPALASAMY IYENGAR,
27—3—12.
Auditor.

257

1912 ஆண்டு பிப்ரவரி மீ 1உ முதல் 28உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

வரவு.	தொகை ரூபா.	அ.	ப.	செலவு.	தொகை. ரூபா.	அ.	ப.
1911-ம் ஆண்டு டிசம்பர், 1912 ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மீ ங்களுக்குரிய புதுக்கோட்டை சமஸ்தானம் மாதச்சந்தா வரவு ...	150	0	0	சங்கச் சிப்பந்திகளுக்கு சம்பளம் செல்லாக்கிய வகையிற் செலவு ...	524	14	1
பாலயம்பட்டி ஜமீந்தார் ஸ்ரீமாந்-P. K. இராமச்சந்திரத்தேவரவர்களிடமிருந்து '12 ஆண்டு ஜனவரி மீ த்துக்குரிய மாதச்சந்தாவரவு ...	20	0	0	கலாசாலை மாணவர்களுக்கு ஆகாராதி போஷணைக்காகச் செலவு ...	137	1	7
செந்தமிழ்ச் சந்தா வகையில் வரவு ...	600	2	0	கலாசாலை உபயோகத்துக்கு வாங்கியபுத்தகம்...	2	8	0
பிரிண்டிங்ஆபீசு அச்சுக்கூலிவகையில் வரவு ... 234—12—6				பைண்டிங் ஸ்டேஷனரிச்செலவு 0— 2—0			
சங்கம் ஆபீசு சம்மந்தமான அச்சுக்கூலி வரவு ... 127—12—0				ஷை கண்டின்ஜன்சிச் செலவு 17— 4—9			
				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	17	6	9
				பிரிண்டிங் ஆபீசு உபயோகத்துக்கு பிளாக் டைப் 2-க்கு ... 0— 6—0			
ஆக பிரிண்டிங் ஆபீசு வரவு ...	362	8	6	ஷை ஆபீசு ஸ்டேஷனரிச்செலவு 30—10—9			

Item	Amount	Rs.	A.	P.
பைண்டிங் ஆபீசு வரவு ...	54— 4—3			
சங்கம்ஆபீசு சம்பந்தமான பைண்டிங் வரவு ...	8— 0—0			
ஆக பைண்டிங் ஆபீசு வரவு ...		62	4	3
புத்தக விற்பனை வரவு ...		106	10	0
சங்கம்காலிநிலம் மாக்கடை வாடகை நாள துவிரோதிகிருது௵ தைமீ"த்துக்கு வரவு ...	35— 0—0			
ஷை இடத்துக்கு அட்வான்ஸ் வரவு ...	40— 0—0			
திருவாங்கூர் சமஸ்தானம் அண்டர் செக்ரிடரி மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணபிள்ளையவர்கள் சங்கத்துக்கு விஜயஞ்செய்தபோது நன்கொடையாகக் கொடுத்தது ...	7— 0—0			
ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷை கட்டணம்வரவு ...	5— 6—0			
விளம்பர வகையிற் சார்ஜ் வரவு (Advertisement Charges)	7-15-0			
மேற்காட்டிய விவரப்படி வரவு ரூ ...		95	5	0

Item	Amount	Rs.	A.	P.
ஷை ஆயில் என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச்செலவு	7—12—7			
ஷை ஆபீசு கண்டின்ஜன்சிச்செலவு	10— 1—2			
ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...		48	14	6
போஸ்டேஜ் வகையிற் செலவு ...		35	0	0
ரிபேர்வகையிற் செலவு ...		1	0	0
1911-௵ டிசம்பர்மீ" 8உ முதல் '12-௵ ஜனவரிமீ" முடிய மீ" 1-க்கு 25 ரூபா வீதம் சங்கமாபீசு கட்டடத்துக்கு வாடகை செலுத்தியது ...		44	14	0
மானேஜிங் கமிட்டி சாங்ஷன்படி லேட் பிரசிடெண்ட் டிரஸ்டியவர்கள் (Funeral Ceremony) கடைசித்தினம் சங்கத்தார் மரியாதை செய்ததற்கு சால்வை வாங்கியது ...	24— 1—0			
ஷை மரியாதைசெய்ய இராமநாதபுரம் போய்வந்த மகா-ா-ா-ஸ்ரீ ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களுக்கும், ஆபீசு ஹெட்கிளார்க் M. R. ஸ்ரீநிவாசய்யருக்கும் ரயில் சார்ஜ் வண்டி வாடகைச் செலவு ...	3—12—6			
ஆபீஸ் உபயோகத்துக்கு வி.பி. புக்போஸ்டல் Guide வாங்கியது	0—10—0			
ஆபீசு சம்மந்தமாய் வண்டிவாடகை வகையராச்செலவு ...	0—13—6			
ஆபீசு உபயோகத்துக்கு சிட்டா, பிரஸ்புக் வகையரா வாங்கியது	4— 2—0			

				ரசீது, லேபிள், M. O. கமிஷன் வகையிற் செலவு ... 0—10—0			
				அபிதான சிந்தாமணி அச்சிட்டவகையில் சென்னை வைஜயந்தி பிரஸ் பில்ப்படி கணக்குத் தீர்த்துக்கொடுத்தது ... 22—15—0			
				பிரிண்டிங் ஆபீஸ் பில்ப்படி சங்கம் ஆபீஸ் அச்சுக்கூலிக்குச் செல் 127—12—0			
				ஷை ஆபீசு பில்ப்படி ஷை ஆபீஸ் பைண்டிங் கூலிக்குச் செல் 8—0—0			
				ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ...	192	12	0
ஆக மொத்தம் ரூ	1396	13	9	ஆக மொத்தம் செலவு ..	1004	6	11
சென்ற ஜனவரி௴ த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ரூ ...	45	12	5	போக பாக்கியிருப்பு ...	438	3	3
ஆக மொத்தம் வரவு ...	1442	10	2	ஆக மொத்தம் ...	1442	10	2
ஆக மொத்தம் ரூ ...	1442	10	2	ஆக மொத்தம் ...	1442	10	2

திரு. நாராயணையங்கார்,
முன் மானேஜர்.
27-3-12.

T. A. Subbuvenkatarama Iyer,
Manager.
27—3—12.

Audited and found Correct
S. GOPALASAMY IYENGAR,
Auditor.
27—3—12.

260

பி. சுப்பராய். ஆயுர்வேத ஔஷதசாலை

ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

1. தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதி முடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவாஸி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திரரோகங்களையும், போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை,போசசக்தி, ஜீரணசக்தி,அபரிமிதமான தாதுவிருத்தியையும் உண்டாக்கும். நீர்த்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

2. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த எப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய்நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும் திரேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணு 8, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:—எந்தக்காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர்த்தாரை எரிவு, சீழ், இரத்தம்வடிதல் முதலிய வியாதிகளையும் ஆண், பெண் இருதாரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீஸா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1-முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

5. சர்வநோய் சம்ஹாரன்:—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால், கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்புநோய், தலைநோய், கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய், குதகவலி, பார்சவாயு, மேகவாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1-முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

6. சுகந்த கூந்தல் தைலம்:—இத்தைலத்தால் தலைமயிர், மீசை, கண் இமை, வெகு செழிப்பாகவும், நெருக்கமாகவும் கருப்பாகவும்வளரும். கண்களைக் குளிர்ச்செய்யும். சகல கண் நோய்களும், தலைநோய்களும் நீங்கும். செம்பட்டைமயிர் கருக்கும். மயிர் உதிராமல் காக்கும். கண்களுக்குப் பிரகாசத்தை தரும். விலை புட்டி 1-க்கு அணு 8, வி. பி. செலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

முக்கிய கவனிப்பு:—என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும், எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன், பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

னோசன்.

வெட்டையைப் போக்கடிக்க இது ஒரு

ஸ்ரீ கைகண்ட மருந்து.

40 காப்ஸல்ஸ்களுள்ள பாட்டில்கள்.

கோனோசன் சீக்சிரம் எரிச்சலுண்டாவதையும் கோடுர நிமிர்ச்சியையும் தணிக்கிறது. இது தான் மிகவும் மேலான மருந்து. இது இரைக்குடரைத் தொந்தரவுசெய்யாமலும், அருவருப்பையும் வாந்தியையும் உண்டாக்க மாட்டாதுந் தவிர குண்டிக்காய்க்குறியில் எரிச்சலு முண்டுபண்ணாது. அநேக வைத்தியர்களிடமிருந்து நற்சாக்ஷி பெற்றுள்ளது. **15**-மணி நேரங்களில் சொஸ்தமாகிறது

HOLY MULLER & SCHMIDT,

7, Colootola Street,

CALCUTTA.

Stocked by:—

T. V. GEORGE & CO.,

CHEMISTS,

MADURA.

☞ எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத வேண்டுகிறேன்.

262

263

(No. 2.)

THE TEST OF TIME!

FOR OVER THIRTY SEVEN YEARS

SCOTT'S EMULSION

has stood every rigid test that learned Physician could suggest.

LUNG TROUBLES,
COUGHS,
COLDS,
LOSS OF FLESH,
POOR APPETITE,

and as a Tonic and Tissue Builder for both Father and Son

NOT TOUCHED BY HAND

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, LTD.

MANUFACTURING

CHEMISTS

LONDON, ENGLAND.

264

No. 3.

MBERLAIN'S COUGH REMEDY.

இருமலுக்கு சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த மருந்து.

இது,
இருமல், சீதளம், சளிமாந்தம்,
நெஞ்சிழைவு, கக்குவாய் இருமல்
முதலான: தொண்டை, மார்வியாதிகளை
எல்லாம் நீக்கும்.

இருமல் விஷயத்தில் அசட்டையாயிருக்கலாகாது. அது அபாயத்துக்கிடமான நோய். அது, கபவாதசுரம், இரத்தகாசம், க்ஷயரோகம் முதலியவைகளில் கொண்டு விடும்.

சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த இருமல் மருந்து, நெஞ்சிலிருக்கும் கபம் அல்லது கோழையை நீக்கும்; உப்பசத்தை ஒழிக்கும், மனதில் சிலியுண்டாக்கும், இருமலையும் போக்கும் நுரையீரலில் (மாரடைப்பு) கஷ்டமில்லாமல் சுவாசம் தாராளமாய்ப் போக வரச்செய்யும். இரவில் இருமலின் உபத்திரவத்தைக் குறைக்கும் நித்திரையைக்கொடுக்கும்.

சேம்பர்லேன் துரை செய்த இருமல் மருந்தில் அபினிக் கலப்பில்லை.

☞ இது மூலிகைமயமான மருந்து.

☞ கைபடாமல் செய்த மருந்து.

எங்கும் கிடைக்கும்.

சின்ன புட்டி ரூ. 1—0—0 **பெரிய புட்டி ரூ.** 2—0—0